# இலக்கு

இதழ் 94

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

செப்டம்பர் 06, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1




## விக்னேஸ்வரனுக்கு ஆதரவளிக்க கூட்டமைப்பு தயங்குவது எதற்காக?

சட்டத்தரணி கே.வி.தவராஜா




## ஆசிய பிராந்திய பூகோள அரசியலில் சிறீலங்காவின் நடுநிலைத்தன்மை நிலைக்குமா?

*வேல்ஸ் இல் இருந்து அருஸ்*



## அன்று தொட்டு இன்று வரை தமிழர் வாழ்வில் பனையின் வகிபாகம்

**கார்த்திகேசு கோபாலகிருஷ்ணன்**
முகாமையாளர், விரிவாக்கம்
பனை அபிவிருத்திச்சபை



## தனிநாயகம் அடிகளார்

எழுத்து வடிவம் *கல்யாணி*



தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர்
**பெ. மணியரசன்**

## தமிழ்நாட்டில் ஈழ ஆதரவுச் செயற்பாடுகள் இப்போதும் சுறுசுறுப்பாக இருக்கின்றன



## இலங்கைத் தீவில் தமிழர் உரிமைகள் மறுக்கப்பட்டதை உரத்துக்கூற தமிழர் நாம் ஒன்றிணைவோம்

*அன்பன்*

## தீப்பிடித்த கப்பலை மீட்பதற்கு இந்தியா, ரஸ்யா ஆகிய நாடுகளை உதவிக்கு அழைத்த சிறீலங்கா



கிழக்கு கடற்பகுதியில் கடந்த வியழக்கிழமை (3) தீப்பிடித்து எரிந்த எண்ணெய்க்கப்பலை மீட்பதற்கு இந்திய மற்றும் ரஸ்ய கடற்படையின் உதவியை சிறீலங்கா கோரியதுடன், இந்தியாவின் 3 கடற்படை கப்பல்களும், அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு பயணம் மேற்கொண்டிருந்த ரஸ்யாவின் கடற்படைக் கப்பல்களும் உதவிகளை வழங்கியிருந்தன.

தனது கடற்படை கப்பல்களான சாயுரா, சாரங் மற்றும் சமுத்ரா ஆகியவற்றுடன் டொநியர் வகை கடற்படை விமானமும் சிறீலங்கா கடற்படையினருக்கு உதவிகளை வழங்கியிருந்தது என இந்தியா தெரிவித்துள்ளது.

இந்திய கடற்படையினரின் உதவியுடன் தற்போது தீ அணைக்கப்பட்டுள்ளதாகவும், கப்பல் ஆழ்கடல் பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் கப்பலில் மீண்டும் வெடிப்பு அல்லது தீ அனர்த்தம் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

## இரட்டைக் குடியுரிமையை வரவேற்றுள்ள மனோ

இரட்டைக் குடியுரிமையுள்ளவர்கள் நாடாளுமன்றம் செல்வதை அனுமதிக்கும் மாற்றத்தை தாம் வரவேற்பதாக நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

20ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள பல விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் இரட்டைக்குடியுரிமை உள்ளவர்கள் அரசியலில் ஈடுபடுவதை அனுமதிக்கும் மாற்றத்தை ஏற்கலாம்.

இரட்டைக் குடியுரிமையுள்ள பசில் ராஜபக்ச வெளியில் இருந்து தானியங்கி கருவி மூலம் அரசை இயக்குவதை விட அவர் நாடாளுமன்றத்திற்கு வந்து அதனை மேற்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரச தலைவருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கியுள்ள 20ஆவது திருத்தச்சட்டம்

சிறீலங்கா அரசு கடந்த புதன்கிழமை (2) 20ஆவது திருத்தச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது. சிறீலங்கா அரச தலைவருக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் இந்த சட்டத்தின் மூலம் பல திணைக்களங்களின் சுயாதீனத் தன்மையை சிறீலங்கா அரசு மட்டுப்படுத்தியுள்ளது.

அதில் உள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

புதிய நாடாளுமன்றம் நியமிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு பின்னர் அரச தலைவர் அதனை கலைக்க முடியும். அமைச்சர்களின் எணிக்கையின் அளவின் மட்டுப்படுத்தல் நீக்கப்பட்டுள்ளது. எத்தனை அமைச்சுக்களையும் அரச தலைவர் தன் வசம் வைத்திருக்க முடியும்.

சுயாதீனஆணைக்குழுக்களின்அங்கத்தவர்கள் மற்றும் தலைவர்களை அரச தலைவர் நியமிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரச தலைவராக ஒருவர் தேர்தலில் நிற்பதற்கான வயது எல்லை 30 ஆக் குறைக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம்மற்றும்மேன்முறைமீட்டு நிதிமன்றங்களின் நீதியாளர்களின் நியமனங்களை மேற்கொள்வதற்கு அரச தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நீதிச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்களை நீக்கும் அதிகாரமும் அரச தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தை கூட்டவும், அமர்வை நிறுத்தவும் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இரட்டைக் குடியுரிமையுள்ளவர்கள் தேர்தலில் போட்டியிட முடியும், 10 பேர் கொண்ட அரசியல் அமைப்பு பேரவைக்கு பதிலாக 5 பேர் கொண்ட நாடாளுமன்ற பேரவை அமைப்பு, அதில் பொது மற்றும் சமூக பிரதிநிதிகளுக்கு இடமில்லை. காவல்துறை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

## சீனாவுக்கும் அமெரிக்காவுகுமிடையில் மோதல் வலுக்கின்றது

சீனாவின் தொலைத்தொடர்பு மற்றும் கட்டுமானப் பணிகள் உட்பட 24 நிறுவனங்கள் மீது அமெரிக்கா கொண்டுவந்த தடையை தொடர்ந்து அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் சிறீலங்கா விவகாரம் தொடர்பில் முரண்பாடுகள் வலுத்துள்ளன.



கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம், மாத்தளை விமான நிலையங்களை நிறுவிய இந்த நிறுவனம் மீதான தடை சிறீலங்காவின் பொருளாதாரத்தை கடுமையாக பதிக்கும்.

இந்த நிலையில் சீனாவும் சிறீலங்காவும் இறைமையுள்ள நாடுகள் எனவும், அமெரிக்காவின் நடவடிக்கை அனைத்துலக விதிகளுக்கு எதிரானது எனவும் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

உலகத்தை அமெரிக்கா இராணுவமயப்படுத்தி வருவதாகவும், உலகில் உள்ள 70 நாடுகளில் 800 படைத்தளங்களை அமெரிக்கா கொண்டுள்ளதுடன், 165,000 படையினரையும் அது அங்கு நிறுத்தியுள்ளது. மேலும் இந்த நடவடிக்கைக்கு அது 100 பில்லியன் டொலர்களை வருடம் தோறும் செலவிட்டுவருகின்றதுஎன அதுமேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில்தளங்களைஅமைப்பதற்கும், பாகிஸ்தான், இலங்கை மற்றும் மியான்மார் உட்பட பல நாடுகளில் சீனா இராணுவத்தளங்களை அமைப்பதற்கு முயன்றுவருவதாக இந்த வாரம் அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகமான பென்ரகன் வெளியிட்டுள்ள 200 பக்க அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சீனா தனது அணுவாயுதங்களை இரட்டிப்பாக்க முயல்வதுடன், மியான்மர், தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேசியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கென்யா, சீஷெல்ஸ், தான் சானியா, அங்கோலா மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளிலும் தளங்களை அமைக்க அது முயன்று வருகின்றது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமாதான முயற்சியின் போது சிறீலங்கா அரசே தன்னை அதிகம் பலப்படுத்திக் கொண்டது

**- எரிக் சொல்கெய்ம்**

விடுதலைப்புலிகள் அதி உச்ச பலமாக இருந்த போதே பேச்சுக்களில் ஈடுபட்டனர், போர் நிறுத்த காலத்தில் சிறீலங்கா அரசு விடுதலைப்புலிகளை விட அதிகமாக தன்னை பலப்படுத்திக் கொண்டது என நோர்வே தலைமையிலான சமாதான தூதுக் குழுவின் பிரதிநிதி எரிக் சொல்கெய்ம் அவர்கள் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு இந்த வாரம் வழங் கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்த முக்கிய பகுதிகள் வரு மாறு:



இந்த சமாதான முயற்சியின் போது நாம் எந்த தரப்பிடம் இருந்தும் நன்மைகளையோ அன்பளிப்புக்களையோ பெறவில்லை. அது தென் னிலங்கையில் நிலவும் தவறான கருத்து. சமாதான காலத்தில் சிறீலங்கா படையினரே தம்மை அதிகம் பலப்படுத்திக் கொண்டனர்; விடுதலைப்புலிகள் அல்ல.

இதனை நாம் போரின் இறுதி ஆண்டுகளான 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கண்டிருந்தோம். உலகில் உள்ள அத்தனை நாடுகளின் ஆதரவையும் சிறீலங்கா அரசு பெற்றிருந்தது. அதில் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியமும் அடங்கும். இந்த நாடுகள் சமாதனத்தை விரும்பின, அவர்களுக்கு இரண்டு தெரிவுகளே இருந்தன விடுதலைப்புலிகளா அல்லது சிறீலங்கா அரசா என்பதே. ஆனால் அவர்கள் சிறீலங்கா அரசின் பக்கம் சென்றதால் சிறீலங்கா அரசு தன்னை நன்கு பலப்படுத்திக் கொண்டது.

நாம் 2002 ஆம் ஆண்டு இந்த முயற்சியை ஆரம்பித்த போது, விடுதலைப்புலிகள் 11,000 இராணுவச் சிப்பாய்களைக் கொண்ட ஆனையிறவுத் தளத்தை வீழ்த்தி யாழ். குடாநாட்டை கைப்பற்றும் நிலையில் இருந்தனர். யாழில் சிக்கியிருந்த படையினரை மீட்பதற்கு இந்திய உதவ முன்வந்திருந்தது. பாகிஸ்தானின் உதவியால் யாழ். குடாநாட்டை சிறீலங்கா அரசு காப்பாற்றிய போதும், கட்டுநாயக்கா வான்படைத்தளம் மீதான தாக்குதல் சிறீலங்காவின் பொருளாதாரத்தை கடுமையாக பாதித்திருந்தது.

அதாவது 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அதி உச்ச பலத்தில் இருந்தனர். அவர்கள் உச்சபலத்தில் இருந்தபோது தான் சமாதானத்திற்கு வந்தனர். அந்த பலத்தை விடுதலைப்புலிகள் முன்னர் எப்போதும் பெற்றிருக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

## விடுதலைப்புலிகளை தீவிரவாத பட்டியலில் இருந்து நீக்கலாம்

தீவிரவாத இயக்கங்களின் பட்டியலில் இருந்து விடுதலைப்புலிகள் இயக்கத்தை நீக்குமாறு உள்துறை அமைச்சர் மொகிதின் யாசினுக்கு இந்த ஆண்டின் துவக்கத்தில் கடிதம் எழுதியதாக மலேசிய முன்னாள் பிரதமர் மகாதிர் மொகமட் தெரிவித்துள்ளார்.



தாம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரிக்கவில்லை என்றாலும், தீவிரவாத இயக்கங்களின் பட்டியலில் இருந்து அந்த இயக்கத்தை நீக்குவது மலேசியாவுக்கு நல்லது என்றும் புத்ராஜெயாவில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது அவர் தெளிவுபடுத்தினார்.

அதேசமயம் பிற நாடுகளைப் போல் மலேசியாவும் எந்தவொரு குழுவையும் 'தீவிரவாதிகள்' என்று சுலபமாக முத்திரை குத்திவிடக்கூடாது என்று வலியுறுத்திய அவர், பாலஸ்தீனத்தின் ஹமாஸ் இயக்கத்தை உதாரணமாகச் சுட்டிக்காட்டினார்.

## வரலாறு தெரியாத எமது தலைவர்கள் எப்படி சிங்களத் தலைவர்களுடன் பேச முடியும்?

**விக்கனேஸ்வரன்**



எங்கள் வரலாற்றை பற்றி சரியாகத் தெரியாத எமது தலைவர்கள் எப்படி சிங்களத் தலைவர்களுடன் பேச முடியும்? அல்லது அதைப் பேசத் தயங்குபவர்களால் எப்படி இனப்பிரச்சினையை தீர்த்து வைக்க முடியும்? என கிளிநொச்சியில் நேற்று (5) இடம்பெற்ற தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் கூட்டத்தில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

"கடமையை செய் பலனை எதிர்பாராதே" என்றது கீதை. ஆனால் தங்கள் கடமையை நிறைவேற்றாமல், காலத்திற்கு காலம் சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என எமது அரசியல் தலைமைகள் இருந்தமையினால்தான் மக்களுக்கு எமது அரசியல் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் இப்போது ஏற்பட்டுள்ள மாற்றம் தமிழ் தேசியத்தின் எழுச்சிக்கான பாதையைத் திறந்திருக்கின்றது என்றே நம்புகின்றேன்.

இம்முறை தேர்தலில், தென்னிலங்கையின் பேரினவாத சக்திகள் மாத்திரமின்றி, நாம் பிரதானமாக விமர்சிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மாத்திரமின்றி எம்முடன் கடந்த காலத்தில் இணைந்து நின்றவர்களும் மற்றும் என்னைத் தனிப்பயணத்திற்கு அழைத்தவர்களுங்கூட எம் மீது

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## நீதி கோரலை வேகப்படுத்துவதே ஈழத்தமிழர் உரிமைகளைக் காப்பாற்ற ஒரேவழி

இலங்கைத் தீவில் சர்வாதிகார ஆட்சி ஒன்றைப் பாராளுமன்றத்தின் மூலம் ஹிட்லர் பாணியில் நிறுவுவதற்கான அனைத்து முயற்சிகளிலும் சிறீலங்காவின் அரச அதிபர் கோத்தபாய ராஜபக்ச அதிவேகமாகச் செயற்படத் தொடங்கியுள்ளார். சிறீலங்காவின் அரசியலமைப்புச் சட்டத்தின் 20ஆவது திருத்தத்திற்கான அரச வர்த்தமானிப்பிரகடனத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரமுள்ள சிறீலங்காவின் அரச அதிபருக்கு கட்டற்ற அதிகாரங்களை வழங்குதல் என்னும் கோத்தபாய சிந்தனை நடைமுறைப்படுத்தப்படுவதற்கான முன்னறிவிப்பு வெளியிடப்பட்டு விட்டது. சிறீலங்கா இனஅழிப்பு அச்சுறுத்தல்களாலும், மதவெறி இனவெறியாலும் மக்களை ஆளுகின்ற முறைமை உலகின் பாதுகாப்பையும், அமைதியையும் பாதிப்படைய வைக்கும் என உலக அரசியல் அரங்கில் தோன்றிய மகிந்த ராஜபக்ச ஆட்சிக்கு எதிரான எதிர்வினைகளே 2015இல் தேர்தல் மூலம் அவரை ஆட்சி இழக்க வைத்தது.

இலங்கை தீவில் சிங்களவர் அல்லாத மக்களின் வாக்குப்பலமே தங்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது என்பதைக் கவனத்தில் எடுத்த ராஜபக்ச குடும்பத்தினர் முற்று முழுதாகச் சிங்கள பௌத்தர் அல்லாத அனைவரையும் அரசியல் அனாதைகளாக்கும் திட்டத்தை 2015 முதல் 2020 வரை பௌத்த மகாசங்கத்தினரின் ஆசியுடன் முன்னெடுத்து 2019இல் கோத்தபாய ராஜபக்சாவை அரசஅதிபராகவும் 2020இல் மகிந்த இராஜபக்சாவைப் பிரதமராகவும் மற்றும் ஐந்து இராஜபக்ச குடும்பத்தினரை அமைச்சர்கள், பிரதியமைச்சர்களாகவும் கொண்ட குடும்ப ஆட்சியை நிறுவியுள்ளமை இன்றைய வரலாறு. சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இவ் எழுச்சி அனைத்துலகச் சட்டங்களின், அமைப்புக்களின் நாடுகளின் தலையீடற்ற சர்வாதிகார ஆட்சி ஒன்றை மக்களாட்சி எனப் பாராளுமன்றக் கொடுங்கோன்மை ஆட்சி மூலம் இன்று நிறுவியுள்ளது. இதற்கு எதிராக மக்கள் எழ முடியாதவாறு இனஅழிப்பில் தேர்ச்சி பெற்ற படை அதிகாரிகளையே அமைச்சுக்களின் முக்கிய நிர்வாகப் பொறுப்புகளில் நியமித்த சிறீலங்கா அரச அதிபர் கோத்தபாய, தற்பொழுது அரசியல் அமைப்புக்கான 20வது திருத்தத்தின் மூலம் பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரத்தையும் நீதித்துறையின் சட்ட அமுலாக்க அதிகாரத்தையும் தன்னிடமே குவியப்பண்ணி, வலுவேறாக்கமற்ற சர்வாதிகாரியாகத் தன்னை நிறுவிக்கொண்டுள்ளார்.

ஆயினும் இந்தியா உட்பட ஐரோப்பிய அமெரிக்க தூதுவர்கள் தற்பொழுது பலமான அரசாங்கமாகத் தன்னை மாற்றிக்கொண்ட கோத்தபாய அரசுடன் தாங்கள் எவ்விதம் உறவுகளை வளர்ப்பது என்பது குறித்த தொடர்புகளைத் தொடங்கியுள்ளனர். ஆசியாவை மையப்படுத்திய வெளிவிவகார மற்றும் பொருளாதாரத் தொடர்பு நாடாகத் தன்னை வெளிப்படுத்தி, சீனாவினதும் இந்தியாவினதும் நட்பை ஒரே நேரத்தில் முன்னெடுத்து யப்பானின் பொருளாதார உதவிகளுடன் முன்னேற்றம் காணுதல் என்னும் நுட்பமான திட்டத்தின் மூலம், 'ஆசியக்கோட்டை' ஒன்றை உருவாக்கி தமக்கான இனஅழிப்பு அனைத்துலக விசாரணைகளில் இருந்து தப்பிக்க மகிந்த சகோதரர்கள் காய்களை நகர்த்துகின்றனர். இந்தியாவுக்கான இலங்கை தூதுவராக பாரதிய ஜனதா கட்சியுடன் ஈடுபாடுள்ள மிலிந்த மொறகொட அவர்களை நியமித்து இதுவரை இலங்கை அரசியல் வரலாற்றில் இல்லாத வகையில் அவருக்கு அமைச்சர் நிலை அதிகாரத்தையும் தீர்மானம் எடுத்தலுக்கு வழங்கியுள்ளனர். பதிலுக்கு இந்தியாவும் சீனாவின் இலங்கையுடனான நட்பை விடத் தனது நட்பு சிறந்தது எனக்காட்டும் காய்நகர்த்தல்களைச் செய்யத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் புலம்பெயர் தமிழர்கள் தாங்கள் வாழும் ஐரோப்பிய அமெரிக்க அவுஸ்திரேலிய ஆபிரிக்க கண்ட நாடுகளை ஈழத்தமிழர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பதிலும் ஈழத்தமிழர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் உடனடியாக உதவிட எல்லாவிதமான சனநாயக அழுத்தங்களையும் சட்டங்களுக்கு அமைவாகப் பயன்படுத்த உறுதி பூண்டாலே இந்த பெரும்பான்மை சனநாயகத்தின் பாராளுமன்றக் கொடுங்கோன்மை ஆட்சியின் இராணுவச் சர்வாதிகார ஆட்சியிலிருந்து ஈழத்தமிழினத்தின் இருப்பைப் பாதுகாக்க முடியும். சுருக்கமாகச் சொன்னால் ஈழத்தமிழினத்திற்கான நீதி கோரலைப் புலம்பெயர் தமிழர்கள் தாயகத் தமிழர்களுடன் இணைந்து வேகப்படுத்துவது ஒன்றே ஈழத்தமிழர்கள் உரிமைகளைப் பாதுகாக்க ஒரேவழியாக உள்ளது.

– ஆசிரியர்



# விக்னேஸ்வரனுக்கு ஆதரவளிக்க கூட்டமைப்பு தயங்குவது எதற்காக?

## சட்டத்தரணி கே.வி.தவராஜா இலக்கு மின்னிதழுக்கு நேர்காணல்

"அரசியலை அப்பால் வைத்துவிட்டு விக்னேஸ்வரனின் கருத்துக்கு ஆதரவாகக்குரல் கொடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த் தரப்புக்கு உள்ளது. அவருக்கு ஆதரவாக அல்லது அவரை விமர்சிக்கும் சிங்களத் தரப்பினருக்கு எதிராக கருத்துக்களை முன் வைப்பது விக்னேஸ்வரனின் செல்வாக்கை அதிகரிப்பதாகவும், அவரது கருத்துக்களுக்கு வலுச் சேர்ப்பதாகவும் அமைந்துவிடலாம் என்ற அச்சம் கூட்டமைப்பினருக்கு இருந்திருக்கலாம். அவர்களுடைய மௌனத்துக்கு காரணம் அதுதான்" என்று கூறுகின்றார் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், பிரபல சட்டத்தரணியுமான கே.வி. தவராஜா. 'இலக்கு' மின்னிதழுக்கு அளித்துள்ள பிரத்தியேக நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவரது நேர்காணலின் முக்கிய பகுதிகள் வருமாறு;

**கேள்வி:**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.ஏ.சுமந்திரனை முன்னிலைப்படுத்தியமைக்குப் பிரதான காரணம் என்ன?**

**பதில்:**

போர் முடிவடைந்த பின்னர் 2010ஆம் ஆண்டு தான் தேசியப் பட்டியல் மூலமாக சுமந்திரன் உள்வாங்கப்பட்டார். அதற்கு முன்னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டமைப்பில் இருந்தார். 2010 தேர்தலின் போது ஏற்பட்ட முரண்பாடுகளால் கஜேந்திரகுமார் வெளியேறினார். அதே காலப்பகுதியில்தான் சுமந்திரன் உள்வாங்கப்பட்டார். தமிழரசுக் கட்சி, காங்கிரஸ் என்பவற்றைப் பொறுத்தவரையில் அரசியலுக்கு வருபவர்கள் அனைவரும் சட்டத்தரணிகளாகவே இருந்துள்ளார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பவற்றிலும் இதேநிலைமைதான் இருந்தது. மூதூரிலிருந்து எம்.பி.யாக வந்த தங்கத்துரைகூட, பாராளுமன்றத்துக்கு வந்த பின்னர் சட்டத்துறையில் படித்து சட்டத்தரணியானவர். அதாவது, அரசியலில் ஈடுபடுவதற்கு சட்டத்துறை அறிவு அவசியமானதாகக் கருதப்பட்டது. 2010இல் கஜேந்திரகுமார் வெளியேறிய பின்னர் சட்டத்துறை சார்ந்தவர்கள் யாரும் எம்.பி.யாக இல்லை. சம்பந்தன் சட்டத்தரணியாக இருந்தாலும் அவரது வயது போன்றவற்றைப் பார்க்கும் போது அவருக்குச் சிறப்பாகச் செயற்படுவது கடினம்.



இந்த நிலையில் தான் சுமந்திரனுடைய பங்கு முக்கியமானதாகியது. மூன்று மொழிகளும் தெரிந்தவர் என்ற முறையிலும், சட்ட, அரசியலமைப்பு விடயங்களைக் கையாளக் கூடியவர் என்ற முறையிலும் சம்பந்தனும், சுமந்திரனும் மட்டுமே இருந்தார்கள். பாராளுமன்றத்தில் மட்டுமன்றி, வெளியிலும் ஜெனீவா போன்ற விடயங்களைக் கையாள்வது இராஜதந்திரிகளுடனான சந்திப்புக்கள் போன்றவற்றிலும் கட்சிக்கு அவர் தேவையான ஒருவராகவே இருந்தார். சட்டத்துறை, அரசியலமைப்பு விவகாரங்களைக் கையாளக்கூடியவர்களாக வேறு எவரும் இல்லை என்பதாலும், இதுபோன்ற விடயங்களையிட்டு நுட்பமாக கலந்தாலோசிக்கக் கூடிய வேறு எவரும் இல்லை என்பதாலும் அவரது முக்கியத்துவம் அதிகரித்தது. சம்பந்தனும் அவரும் கலந்துபேசி முடிவுகளை எடுத்தமைக்கும் அது தான் காரணமாக இருந்துள்ளது.

**கேள்வி:**

**பாராளுமன்ற முதல்நாள் அமர்வில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நிகழ்த்திய உரை சிங்களத் தரப்பினருடைய கடுமையான விமர்சனத்துக்குள்ளாகியிருக்கின்றது. இது குறித்து தமிழ்க் கட்சிகள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு என்ன?**

**பதில்:**

விக்னேஸ்வரன் கூறிய விடயம் தொடர்பில் மாற்றுக் கருத்து எதற்கும் இடமில்லை. அவர் சொன்ன விடயங்கள் முற்றுமுழுதாக உண்மை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தேசிய நீக்கம், புலி நீக்க அரசியல் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் கூட்டமைப்பிலிருந்து தேசியம் குறித்து இதுவரையில் யாரும் பேசியதில்லை.



இவ்வாறான நிலையில் விக்னேஸ்வரன் பேசியது முக்கியமானது என்பதுடன், முற்றிலும் உண்மை. அவர் சொன்னதில் உண்மை இருக்கின்றதா என்பதைப் பார்ப்பதைவிட்டுவிட்டு, சிங்களத் தரப்பினர் வெறுமனே எதிர்ப்பைத் தெரிவிக்கின்றார்கள். விக்கினேஸ்வரனின் உரைக்கு இந்தளவுக்கு எதிர்ப்பு வெளிவந்திருக்கும் நிலையில்கூட, தமிழ் எம்.பி.க்கள் யாரும் அவருக்கு ஆதரவளிக்கவில்லை. மனோ கணேசனுக்கு விக்னேஸ்வரன் ஆதரவளித்தார். ஆனால், இப்போது விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக மனோ கணேசன் வாய்திறக்க வில்லை. விக்னேஸ்வரனுக்கு அல்ல - அவரது கருத்துக்கு ஆதரவளிக்க இவர்கள் ஏன் தயங்க வேண்டும்?

துணிந்து அவருக்கு - அவருடைய கருத்துக்கு ஆதரவாக யாரும் பேசாமலிருப்பது உண்மையில் கவலைக்குரிய ஒரு விடயம். தமிழ் மொழி ஒரு ஆதி மொழி என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இதனை இந்தியப் பிரதமர் மோடி கூட கூறியிருக்கின்றார். விக்னேஸ்வரனின் இந்தக் கருத்துக்கு ஆதரவளிக்காவிட்டால் தமிழ்க் கட்சி எம்.பி.க்கள் பாராளுமன்றம் செல்வதிலும் எந்த அர்த்தமும் இல்லை. பாராளுமன்றத்தில் யார் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள் என்று பார்த்தால், யாரை அதிகாரத்துக்குக் கொண்டுவர வேண்டும் என தமிழ் மக்கள் வாக்களித்தார்களோ அந்த சஜித் பிரேமதாச அணியினர்தான் இந்த எதிர்ப்பைத் தெரிவிக்கின்றார்கள். வரப்போகும் மாகாணசபைத் தேர்தலுக்கான அத்திவாரமாகத்தான் அவர்களுடைய இந்தச் செயற்பாடு நோக்கப்படுகின்றது.

**கேள்வி:**

**விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துக்களுக்கு எதிராக சிங்களத் தரப்பினர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துவருகின்ற நிலையிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனமாக இருப்பது ஏன்?**

**பதில்:**

அவர்கள் மௌனமாக இருப்பது கவலைக்குரிய ஒரு விடயம். அரசியலை அப்பால் வைத்துவிட்டு இந்தச் சந்தர்ப்பத்தில் விக்னேஸ்வரனின் கருத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருந்தது. அவருக்கு ஆதரவாக அல்லது அவரை விமர்சிக்கும் சிங்களத் தரப்பினருக்கு எதிராக கருத்துக்களை முன்வைப்பது விக்கினேஸ்வரின் செல்வாக்கை அதிகரிப்பதாகவும், அவரது கருத்துக்களுக்கு வலுச்சேர்ப்பதாகவும் அமைந்துவிடலாம் என்ற அச்சமும் அவர்களுக்கு இருந்திருக்கலாம். அவர்களுடைய மௌனத்துக்கு காரணம் அதுதான். ஆனால், இது விக்னேஸ்வரன் அல்ல யார் இந்தக் கருத்தைக் கூறியிருந்தாலும் ஆதரிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்குள்ளது.

**கேள்வி:**

**இந்த விடயங்களில் புலம்பெயர்ந்த தமிழர்கள் என்ன செய்ய வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?**

**பதில்:**

தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்கு முக்கியமானது. தாயகத்திலும், புலம்பெயர்ந்தும் வாழும் தமிழர்கள் விக்னேஸ்வரின் கருத்தை ஆதரிக்க வேண்டும். விக்னேஸ்வரனை ஆதரிக்கின்றார்களா இல்லையா என்பது வேறுவிடயம்.

**கேள்வி:**

**பொது ஜன முன்னணி அரசின் அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகளால் 13ஆவது திருத்தம் பலவீனப்படுத்தப்படும் நிலை ஏற்படுமா?**

**பதில்:**

உடனடியாக அவர்கள் 20ஆவது திருத்தத்தைத்தான் கொண்டுவரப்போகின்றார்கள். அரசியலமைப்புச் சீர்திருத்தம் எப்போது வரும் என்பது என்னைப் பொறுத்தவரையில் ஒரு கேள்விக்குறியாக உள்ள விடயம். 20 ஆவது திருத்தத்தைச் செய்த பின்னர் அபிவிருத்தி போன்றவற்றில் அரசாங்கத்தின் கவனம் செல்லுமே தவிர, புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டுவருவதில் அவர்களுடைய கவனம் செல்லும் என நான் கருதவில்லை.

ஏனெனில் அவர்களுக்கு உடனடியாகத் தேவையாக இருப்பது 20 தான். புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் - அதன் மூலமாக இன நெருக்கடிக்குத் தீர்வைக் காண வேண்டும் என்பதுதான் அனைவரது விருப்பமும். 20 ஆவது திருத்தம் வந்தபின்னர் அரசாங்கத்தை யாராலும் கேள்விக்கு உட்படுத்த முடியாத ஒரு நிலை ஏற்படும். 18ஆவது திருத்தம் இருந்த போது காணப்பட்ட நிலையைவிட மோசமான ஒரு நிலை ஏற்படும். இந்த அரசாங்கத்தை இவர்கள் சிங்கள -

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# ஆசிய பிராந்திய பூகோள அரசியலில் சிறீலங்காவின் நடுநிலைத்தன்மை நிலைக்குமா?

தமது அதிகாரங்களை மையமாகக் கொண்டும், சிங்கள மக்களின் நலன்களை முன்நிறுத்தியும் காலம் காலமாக கொண்டுவரப்படும் அரசியல் திருத்தங்களின் பட்டியலில் 20 ஆவது திருத்தச்சட்டமும் இணைந்துள்ளது.

1978களில் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவினால் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் பதவிக்கான அத்தனை சலுகை களையும் தற்போதைய புதிய சட்டம் மீண்டும் வழங்கியுள்ளது. ஜே.வி.பியின் அழுத்தம் காரணமாக கொண்டுவரப்பட்ட 17ஆவது திருத்தச் சட்டத்தின் சரத்துக்களையும், ரணிலின் பதவிக்கான அதி காரத்தை குவிப்பதற்கு அனுசரணை வழங்கிய 19 ஆவது திருத்தச்சட்டத்தையும் தற்போதைய புதிய சட்டம் இல்லாது செய்துள்ளது.



அதிகாரங்களை அதிகரிக்கும் அடிப்படைக் கோட்பாடுகளை கொண்டதாகவே சிறீலங்காவின் அரசியல் சட்டங்கள் வரையப்பட்டு வருகின்றன. அற்கு 17ஆவது திருத்தச்சட்டமும், 19ஆவது திருத்தச்சட்டமும் கூட விதிவிலக்கு அல்ல. 17ஆவது திருத்தச்சட்டமானது சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு அதிகாரங்களை வழங்கும் சட்டமாகும். அதன் மூலம் தென்னிலங்கை சிங்கள கட்சிகள் தேர்தல் சுயாதீனமாக இதுவரை இடம்பெற்றதாக திருப்தியடைந்து வந்தன. இதனை கூட சந்திரிக்கா நல்ல நோக்கத்திற்காக கொண்டுவரவில்லை.

ஜே.வி.பி யின் ஆதரவை பெற்று தனது அதிகாரத்தை தக்கவைப்பதற்காக அவர் மேற்கொண்ட நடவடிக்கை அது. மேலும் சிறீலங்காவின் நீதித்துறை, காவல்துறை, தேர்தல் ஆணையகம் போன்றவை அரசியல் தலையீடுகள் இல்லாது சுயாதீனமானதாக மாற்றப்பட வேண்டும் என்று மேற்குலகம், குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியமும், அனைத்துலக மனிதாபிமான அமைப்புக்களும் தொடர்ந்து விடுத்துவந்த கோரிக்கையை நிறைவேற்றுவதன் மூலம் தமது பொருளாதார நலன்களை பேணுவதற்கு சிறீலங்கா அரசு மேற்கொண்ட நடவடிக்கை அது. எனவே தான் அதன் மூலம் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு சபையினை பின்னர் தானே இல்லாது செய்தது சிறீலங்கா அரசு.



2015ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 19ஆவது திருத்தச்சட்டம் கூட பிரதமருக்கான பதவியை அதிகரிக்கும். ரணில் அதிகாரக் குவிப்பு சிந்தனையின் கோட்பாடாகவே பார்க்கப்பட்டது. தான் அரச தலைவரானதும் 100 நாட்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசதலைவர் நடைமுறையை இல்லாது செய்வேன் என தெரிவித்த சிறீலங்காவின் முன்னாள் அதிபர் மைத்திரிபால சிறீசேனாவால் செய்ய முடிந்தது 19ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டுவந்ததே தவிர வேறுஇல்லை. அதாவது அவரும் தனது பதவியினை அனுபவிக்கவே முற்பட்டு நின்றுள்ளார்.

ஜே.ஆர் 1978ஆம் ஆண்டு கொண்டுவந்த நிறைவேற்று அதிகாரமுள்ள அரச தலைவர் முறையுடன் ஒத்துப்போகாததால் 17ஆவது மற்றும் 19 ஆவது திருத்தங்களால் நிலைத்து நிற்க முடியவில்லை. 17ஆவது திருத்தச்சட்டம் பல தடவைகள் பின்னடைவைச் சந்தித்ததுடன், தற்போது மீண்டும் காணாமல் போயுள்ளது. அதாவது 17ஆவது மற்றும் 19ஆவது திருத்தங்கள் கூட அன்றைய ஆட்சியாளர்களின் அதிகாரத்தினை தக்கவைப்பதற்காக கொண்டுவரப்பட்டவையே தவிர ஜனநாயக நடைமுறைகளுக்காக அல்ல.

எனினும் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள புதிய சட்டமானது முன்னைய திருத்தச்சட்டங்களை விட அதிக அதிகாரங்களை குடும்ப அரசியலுக்கு வழங்கியுள்ளது. இரட்டைக்குடியுரிமை உள்ள பசில் ராஜபக்ச நாடாளுமன்றம் செல்ல அது வழிவகுத்துள்ளது. ராஜபக்ச குடும்பத்தில் உள்ளவர்களில் பலர் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள். மேலும் 1985ஆம் ஆண்டு பிறந்த மகிந்த ராஜபக்சாவின் புதல்வர் நமால் ராஜபக்சவை அரச தலைவராக்கவும், அதற்கு பின்னுள்ள அவரின்

**வேல்ஸ் இல் இருந்து அருஸ்**

சகோதரர்களுக்கு வழியேற்படுத்திக் கொடுக்கவும் ஏதுவாக அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கான வயது எல்லையும் 30 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள் எல்லாம் தமிழ் மக்களை பாதிக்குமா என்றால் அதன் விளைவுகள் குறை வானதே. ஏனெனில் தமிழ் இனம் மீதான இன அழிப்பை மேற்கொள்வதற்கு சிங்கள அரசுகளை எந்த சட்டமும் தடுப்பதில்லை. எந்த சட்டங்களையும் அவர்கள் மதிப்பதுமில்லை. எனவே இந்த சட்டங்கள் காலப்போக்கில் சிங்கள தேசத்திற்கு ஆபத்தானதாக மாற்றமடையலாம்.

இதனிடையே, சிறீலங்காவின் தற்போதைய இந்த மாற்றங்கள் என்பது சிறீலங்கா சந்தித்துள்ள பூகோள அரசியல் நெருக்கடிகளை எதிர்கொள்ள உறுதுணை வழங்குமா என்பது கேள்விக்குறியே. சீனாவின் 24 நிறுவனங்கள் மீது அமெரிக்கா கொண்டுவந்த தடை என்பது முழுமையாக நிறைவேற்றப்பட்டால், அது சிறீலங்காவை கடுமையாக பாதிக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஏனெனில் சிறீலங்காவின் அம்பாந்தோட்டை துறைமுகம், மாத்தளை விமன நிலையம், கொழும்பு துறைமுக நகரம் போன்றவற்றை அபவிருத்தி செய்த நிறுவனமும் இதில் அடங்கும். தேர்தலுக்கு முன்னரே ராஜபக்சாக்களின் ஆட்சிக்கு அதிக ஆதரவுகளை வழங்குவதைபோல காட்டிக் கொண்ட அமெரிக்க அரசு தற்போது மறுவளமாக தடையையும் கொண்டுவந்துள்ளது.

இந்தோ-பசுபிக் கடல் பிராந்தியத்தில் சீனாவுக்கு எதிராக கூட்டுச் சேர்ந்துள்ள இந்தியா, அமெரிக்கா, யப்பான் மற்றும் அவஸ்திரேலியா கூட்டணியிற்கு வலுச்சேர்ப்பதே இந்த தடையின் நோக்கம். இந்த தடையினை தொடர்ந்து அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் மார்க் எஸ்பர் சிறீலங்கா அரச தலைவருடன் கடந்த ஞாயிற்றுக் கிழமை தொலைபேசியில் நீண்ட நேரம் உரையாடியிருந்தார்.

இந்த உரையாடலில் சீனாவின் தொலைதொடர்பு கட்டுமான நிறுவனம் மீதான தடை தொடர்பான விடயங்களும் இடம்பெற்றிருக்கும்; ஆனால் அதனை ஊடகங்களுக்கு அவர்கள் வெளியிடவில்லை. மிலேனியம் சலஞ் உடன்பாட்டுடன் ஏனைய இரு படைத்துறை உடன்பா டுகளான Acquisition and Cross Service Agreement (ACSA) and the Status of Forces Agreement (SOFA) போன்றவற்றையும் சிறீலங்கா அரசு நியைவேற்ற வேண்டும் என்பதில் அமெரிக்கா விடாப்பிடியாக உள்ளது. ஆனால் அதனை எதிர்ப்பது ராஜபக்சாவின் கட்சிகளே. தற்போது பௌத்த துறவிகளும் அதில் இணைந்துள்ளனர்.



எனினும் சிறீலங்காவை இந்தியாவின் ஒரு பகுதியாகவே இந்த நான்கு நாடுகளின் கூட்டணி பார்க்கின்றது. எனவே தான் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்தை இந்தியா முன்வைத்திருந்தது. சீனாவிடம் வாங்கிய அதிக கடன்கள், அதனுடன் மேற்கொண்ட உடன்பாடுகள், சீனாவுக்கும் சிறீலங்காவுக்குமிடையிலான பௌத்தமத பிணைப்புக்கள் என்பன சிறீலங்காவை இந்த நான்கு நாடுகளின் கூட்டணியில் இருந்து தள்ளி இருக்கவே வழிவகுக்கும்.




எனவே தான் தற்போது தோன்றியுள்ள பூகோள நெருக்கடியில் தாம் முதன்மை பெற்றுள்ளதாக மார்தட்டிக்கொண்டுள்ள சிறீலங்கா அரசு தாம் நடுநிலையை பேணப்போ வதாக தெரிவித்துள்ளது. அதனை தான் சிறீலங்காவின் புதிய வெளிவிவகார அமைச்சரும் அண்மையில் தெரிவித்திருந்தார். ஆனால் சீனா மீதான அமெரிக்காவின் தடைகள் இறுகும்போது சிறீலங்கா தனது நடுநிலை தன்மையை முற்றாக துறக்கவேண்டிய நிலை எற்படும் என்பதே இங்கு யதார்த்தமானது.

• • •

# இலங்கைத் தீவில் தமிழர் உரிமைகள் மறுக்கப்பட்டதை உரத்துக்கூற தமிழர் நாம் ஒன்றிணைவோம்

அன்பன்

பண்டைய தமிழர் தாயகம் ஈழம். இன்று சிங்களவர்களுக்கான சிறீலங்காவாக மாற்றப்பட்டுள்ளது. சிறிலங்காவை ஆட்சி புரிந்த, புரியும் சிங்களக் கட்சிகளால் அமுல்படுத்தப்பட்ட சட்டங்களும், திட்டங்களும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சிங்கள அரச பயங்கரவாதமும் இலங்கைத்தீவில் தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வு நிலைகளையும், வாழ்வு இயக்கங்களையும் மாற்றியமைத்தது.

தமிழர்களின் வாழ்வுக்காக உருவாக்கப்பட்ட ஒப்பந்தங்களும் தீர்வுகளும் கிழிக்கப்பட்டதும், அழிக்கப்பட்டதும் அவை நடைமுறைப்படுத்தப்படாமல், போனதே சிறீலங்காவில் மறைக்கப்பட்ட வரலாறாகியது.

சிங்களக் கட்சிகளின் அரச பயங்கரவாதத்திற்கும் இணைந்த ஆளுகைப் பயங்கரவாதம் தமிழர் தாயக பூமியை சிங்களமயப்படுத்தி அதற்கு உதவியாக இராணுவமயப்படுத்தியதும், சிறீலங்காவில் தமிழர் இனத்தின் இருப்பையே கேள்விக் குறியாக்கியுள்ளது.

ஒட்டுமொத்தமாக தமிழ் மொழியை அழித்து, தமிழர்களின்கலை, பண்பாட்டை சீர்குலைத்து, தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, தமிழர் வரலாற்றைத் திரித்து, தமிழ்த் தேசியத்திற்கான எண்ணக்கருவை அழிக்கும் சிங்கள அரசுகளின் இச் செயற்பாடுகள் சிறீலங்காவில் தமிழர்களின் வாழ்வுரிமையையே மறுத்து வருகின்றது.

இதற்கு எடுத்துக்காட்டாக சிறீலங்காவில் அமுல்படுத்தப்பட்ட பிரஜா உரிமைச் சட்டம், வாக் குரிமைச்சட்டம், தனிச் சிங்களச் சட்டம், பிரதேசசபைச் சட்டம், மாவட்ட அபிவிருத்திச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியவற்றைக் கூறலாம். இச்சட்டங்கள் யாவும் தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிராகவும், சிங்கள இனத்திற்கு சார்பாகவும் அமைந்தன.

இதேபோன்று தான் சிங்களத் தலைமைகளால் உருவாக்கப்பட்ட ஒப்பந்தங்க ளும், திட்டங்களும்கூட தமிழ் மக்களின் பிரச்சினை க்கான தீர்வாக அமையவில்லை. மாறாக தமிழினத்திற்கு எதிராகவே அமைந்தன.

**• பண்டா – செல்வா ஒப்பந்தம்**



சிங்களத் தலைவர் பண்டாரநாயக்காவுக்கும்தமிழ்த்தலைவர்தந்தைசெல்வநாயகத்திற்கும் இடையேயான ஒப்பந்தம். 1957 ஜுலை 26இல் கையெழுத்தானது.

**• டட்லி – செல்வா ஒப்பந்தம்**

சிங்களத் தலைவர் டட்லி சேனநாயக்காவிற்கும் தமிழ்த் தலைவர் தந்தை செல்வா என அழைக்கப் படும் செல்வநாயகத்திற்கும் இடையேயான ஒப் பந்தம். 1965 மார்ச் 24இல் ஏற்படுத்தப்பட்டது.

இந்த ஒப்பந்தங்கள் தமிழர் பிரச்சினைக்கான தீர்பாக பிரதேச மட்டத்தில் அதிகாரங்களை பரவலாக்கல் என்ற அம்சங்களை கொண்டிருந்தது.



**• ஜே.ஆர் – அமிர்தலிங்கம் ஒப்பந்தம்**

சிங்களத் தலைவர் சிறீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அ.அமிர்தலிங்கத்திற்கும் இடையேயானது. இது மாவட்ட மட்டத்தில் மாவட்ட அபிவிருத்தி சபைகளை உருவாக்கி அதிகாரத்தை பரவலாக்கல் என்பது பற்றிக் கூறியது.

**• பிரேமதாசாவின் பிரதேச சபைகள் திட்டம்**

சிறீலங்கா அதிபர் ரணசிங்க பிரேமதாசாவால் கொண்டு வரப்பட்டது. பிரதேச மட்டத்தில் பிரதேச சபைகளையும், பிரதேச செயலர் பிரிவுகளையும் உருவாக்கி அவற்றைப் பலப்படுத்துதல். இத்திட்டத்தல் உருவான பிரதேச செயலர் பிரிவுகளுக்கான பிரதேச செயலர்களுக்கு அரச அதிபருக்கு இணையான ஆளுகை அதிகாரத்தை வழங்குதல் என்ற விடயம் இருந்தது.

**• இந்திய – இலங்கை ஒப்பந்தம்**



இது இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும் சிறீலங்கா அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்குமிடையே 29 ஜுலை 1987இல் கையெழுத்தாகியது. இந்த ஒப்பந்தம் தமிழர்களின் பிரதிநிதிகள் இன்றி எழுதப்பட்டது. இது தமிழர் தாயகத்தில் வடக்கு – கிழக்கு மாகாணங்களை தற்காலிகமாக இணைத்து, பின்னர் அவற்றை பிரிக்கும் சூழ்ச்சியைக் கொண்டிருந்தது.

**• சந்திரிக்காவின் கிழக்கு மாகாணத்தை துண்டாடும் திட்டம்**

சிறீலங்கா அதிபர் சந்திரிக்கா குமாரதுங்க அவர்களால் முன்வைக்கப்பட்டது. இத்திட்டம் தமிழர் தாயகமான கிழக்கு மாகாணத்தை மூன்று பகுதி களாகப் பிரித்து தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கென உருவாக்குதல். தமிழ்ப் பகுதியை வடக்கு மாகாணத்துடன் இணைத்தல் என்ற விடயத்தைக் கொண்டிருந்தது.

இந்த ஒப்பந்தங்களும் திட்டங்களும் சிங்களத் தலைமைகளாலும் இந்திய அரசாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், தமிழர்களின் உரிமைகளுக்கான தீர்வாக அமையவில்லை. அவை தமிழர் தாயகத்தில் காணி (நில உரிமை), காவல் மற்றும் நிதி ஆளுகைகளை தமிழர்களுக்கு தர மறுத்தது. சிங்களவர்களின் ஆளுகையையும், அதிகாரங்களையும் தமிழர் தாயகத்தில் மேலும் பலப்படுத்துவதாகவும் அமைந்தன. தமிழர்காளல் முன் வைக்கப்பட்ட தமிழர்களுக்கான சுயாட்சித் திட்டங்களை இந்த ஒப்பந்தங்களும் திட்டங்களும் புறக்கணித்தன. இவை தமிழர் தாயகத்தில் தமிழர்கள் அதிகாரமற்றவர்களாக வாழும் நிலைகளை ஏற்படுத்தியது.

இதன் விளைவாகவே சாத்வீக வழியிலும், ஆயுதம் ஏந்தியும் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வாக தமிழீழம் என்ற நோக்க இலக்கை வைத்து போராடினார்கள். தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக்கி, சிங்கள அரசுகளும், உலக அரங்கும் இணைந்தும் உருவாக்கியுள்ள இன்றைய நிலை மாற்றப்பட வேண்டும். இந்த நிலை தமிழர்களின் பிரச்சினைக்கான எந்தத் தீர்வையும் முன்வைக்கப் போவதில்லை.

சிங்கள அரசுகளின் சூழ்ச்சியும் செயற்பாடுகளும் உலக அரசுகளின் நலனும் ஒன்றிணைந்து தமிழர் விடுதலைப்போராட்டத்தை மௌனமாக்கியுள்ளது. இதன் விளைவு

* **தமிழர் தாயகம் சிங்களமயப்படுத்தப்படும் வகையில் இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளது.**

* **சொந்த மண்ணில் தமிழர்கள் சுதந்திர மற்றவர்களாக பாதுகாப்பின்றி அவல நிலையில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.**

* **தமிழர்கள் அகதிகளாக புலம்பெயர்ந்து வாழும் நிலை உருவாகியுள்ளது.**

* **தமிழர்களின் இனப்பரம்பல் குறைக்கப்பட்டுள்ளது.**

* **தமிழ் மக்களின் உரிமைக்குரல் சிறீலங்கா பாராளுமன்றத்தில் பலவீனமாகி உள்ளது.**

* **சிங்கள அரச பயங்கரவாதம் மறைக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் உலக அரங்கை ஏமாளியாக்கி மௌனமாக்கியுள்ளது.**

* **தமிழர் விடுதலையை மறுத்து தமிழ் இனத்திற்கு எதிராக சிங்கள இனவாதம் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.**

இந்த நிலைகள் மாற்றப்பட வேண்டும். சாத்வீக வழியிலும், ஆயுதம் ஏந்தியும் தமிழ் இனத்தின் விடுதலைக்காக போராடிய தமிழினம், தமது போராட்டத்தை இராஜதந்திர வழியில் உலக அரங்கில் ஒன்றிணைத்து எழுச்சிபெற்று தமிழீழம் மற்றும் தமிழகத்துடன் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். உலகிற்கு உண்மையை உரக்கச் சொல்லி தமிழர் விடுதலைப் போராட்டம் என்பதை நிரூபிக்க வேண்டும்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் கையில் தமிழர் தாயகம் இருக்கின்றது என்பதை உணர்ந்து செயற்பட ஒன்றிணைவோம். உலக அரங்கின் மன சாட்சியைத் தட்டியெழுப்புவோம்.

தொடரும்...



# தனிநாயகம் அடிகளார்

1913ஆம் ஆண்டு ஆவணி மாதம் இரண்டாம் திகதி யாழ்ப்பாணம் கரம்பொன் என்னுமிடத்தில் கணபதிப்பிள்ளை நாகநாதன் ஸ்ரனிஸ்லாஸ், சிசிலியா பஸ்தியாம்பிள்ளை ஆகியோருக்கு மூத்த மகனாக சேவியர் பிறந்தார். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலே ஆரம்பக் கல்வியை தொடங்கினார். 1923ஆம் ஆண்டு தொடக்கம் 1930ஆம் ஆண்டு வரை தனது மேற்படிப்பை யாழ். சென். பத்திரிசியார் கல்லூரியில் தொடர்ந்தார். இக் காலகட்டத்தில் ஆங்கில இலக்கியம், ஆங்கில மொழி, ஆங்கில கவிதைகள், ஆகியவற்றில் நாட்டம் ஏற்பட்டது. அவரின் பன்னிரெண்டாவது வயதில் அவரின் தாயார் இறந்தார். அதன் பின்னர் அவர் தான் ஒரு குருவானவராக வரவேண்டும் என எண்ணினார். இதற்குக் காரணம் தோல்ஸ்டோய் என்பவரின் உயிர்ப்பு என்ற நாவல் தன்னுடைய உள்ளத்திலே ஏற்படுத்திய தாக்கம் தான் காரணம் என்று தெரிவித்தார். அந்த வாக்கியம்

“ஒரேயொரு முறை தான் இவ்வுலகில் நான் பயணிப்பேன். இக்காலத்தில் ஏதாவதொரு நற்செயலை என்னால் செய்ய முடியும் என்றால், இன்னொரு உயிருக்கு என்னால் அன்பு காட்ட முடியும் என்றால், அதை நான் இப்போதே செய்யப் போகிறேன். ஏனென்றால், மீண்டும் ஒரு தடவை இவ்வுலகில் நான் கால் பதிக்க மாட்டேன்” என்பதே அந்த வாக்கியம்.

1931ஆம் ஆண்டு தனது குருத்துவக் கல்வியை மேற்கொள்வதற்காக கொழும்பிலுள்ள பேணாட் குருமடத்திற்குச் சென்றார். அங்கே மெய்யியலைக் கற்றதுடன், உயிரோட்டமுள்ள ஓர் எழுத்தாளனாகவும் திகழ்ந்தார். உரோமாபுரிக்குச் சென்று இறையியல் கல்வியைத் தொடர அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. இதேவேளை, அவரை ஆதரித்த கியோமர் ஆண்டகை அவரை தொடர்ந்து ஆதரிக்க மறுத்து விட்டார். இந்த வேளையில் அவருக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் யாழ். சென் பத்திரிசியார் கல்லூரி அதிபர் சாள்ஸ் மத்தியுஸ் அடிகளார் மற்றும் சாள்ஸ் லோங் அடிகளார் ஆவர். இவர்களின் ஆதரவுடன் கேரளாவில் உள்ள சீரோ மலங்கார் ஆயரான மேதகு மார் இவானியூஸ் ஆண்டகை அவர்கள் சேவியர் அவர்களை உரோமாபுரிக்கு அனுப்பி வைத்தார்.




1934ஆம் ஆண்டு 21 வயதான சேவியர், தனது இறையியல் கல்வியை தொடர்வதற்காக கடல் வழியாக உரோமாபுரிக்கு பயணமானார். 1938 மார்ச் 19ஆம் திகதி உரோமாபுரியில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இக்காலகட்டத்திலேயே தமிழ் மொழி மீதான ஆர்வம் அவருக்கு ஏற்பட்டது. அங்கே வீரமாமுனிவர் கழகத்தில் இணைந்து பணியாற்றத் தொடங்கினார். அத்துடன் வத்திக்கான் வானொலியிலும் தமிழ் மொழி பிரிவில் பணி யாற்றினார். 1939ஆம் ஆண்டு ரோமில் தனது இறையியற் கல்லூரியை நிறைவு செய்த சேவியர் தன்னை ரோமாபுரிக்கு அனுப்பி வைத்த இவானியூஸ் ஆண்டகையின் மறைமாவட்டத்திலே பணியாற்றுவதற்காக கேரளா, திருவனந்தபுரம் சென்றார். அங்கு பணியாற்றுவது அவருக்கு ஒத்து வரவில்லை. இதனால் தனிநாயம் அடிகளார் இவானியூஸ் ஆண்டகையின் அனுமதியில்லாமலே உரோமாபுரிக்கு மீண்டும் செல்வதற்குத் தீர்மானித்தார். பின்னர் மேதகு திபூஸியஸ் ஆண்டகை அவர்களின் மறைமாவட்டமான தூத்துக்குடியில் சேவியர் அவர்கள் தனது குருத்துவப் பணி யைத் தொடர உரோமாபுரியிலுள்ள அவரது பேராசிரியர் அவருக்கு வழிசமைத்துக் கொடுத்தனர்.

1941ஆம் ஆண்டு சேவியர் அவர்கள் தனக்கு தமிழ்ப் பெயரை சூட்டுவதற்கு விரும்பி தனது தந்தையுடன் கலந்தாலோசித்து தந்தை வழி மூதாதையாரான தனிநாயகம் என்ற பெயரை சூட்டிக் கொண்டார். தூத்துக்குடி, வடக்கன்குளம், அத்துடன் புனித திரேசா கல்லூரியில் உப அதிபராக பதவியேற்றார். அக்காலப்பகுதியிலேயே தமிழை

**எழுத்து வடிவம் கல்யாணி**

உரிய முறைப்படி கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு தோன்றியது. தூத்துக்குடியிலுள்ள சுப்பிரமணியம் பண்டிதரிடம் தமிழ் மொழியை முறைப்படி கற்கத் தொடங்கினார். 1945ஆம் ஆண்டு 32 வயதிலே சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை மாணவனாக சேர்ந்து கொண்டார். இங்கு கல்வி கற்ற காலப் பகுதியில் பல்வேறு தமிழ் அறிஞர்களையும் சந்திப்பதற்கான வாய்ப்பு தனிநாயகம் அடிகளாருக்கு கிட்டியது. 1947இல் தமிழ் மொழியில் முதுகலைப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து கல்வி கற்று 1949இல் தமிழ் இலக்கியத்தில் முது கலைப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். பேராசிரியர் சிதம்பரனாரின் ஆதரவுடன் ‘பழந்தமிழ் இலக்கியத்தில் இய ற்கை’ என்னும் விடயம் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டார். இந்த ஆய்வு பின்னர் நூலாக வெளியிடப்பட்டது. இந்த நூலை ஆய்வு செய்த கபில் சுவெலபேல் அவர்கள், பழந்தமிழ் இலக்கியத்தில் இதுவரை எழுதப்பட்டவற்றை இந்நூல் விஞ்சி நிற்கிறது எனப் பாராட்டுத் தெரிவித்தார்.



அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலப்பகுதியில் தான் அடிகளாருக்கு இலக்கியத்தில் ஆர்வம் ஏற்பட்டது. 1949 – 1951 வரை மலேசியா சீனா யப்பான், அமெரிக்கா ஐக்கிய நாடுகள், தென்னமெரிக்காவிலுள்ளபனாமா, ஈகுவாடோர், பெரு, சிலி, ஆஜென்டீனா, உருகுவே, பிறேசில், மெக்ஸிகோ, மேற்கிந்திய தீவுகளான திரினிதாத், ஜமேய்க்கா, மார்த்தீனிக், மத்திய ஆபிரிக்கா, வட ஆபிரிக்கா, இத்தாலி, பாலஸ்தீனம், எகிப்து, போன்ற பல நாடுகளுக்கும் பயணம் செய்து, தமிழ் மொழி, கலை, வரலாறுபற்றி அடிகளார் உரையாற்றினார். இந்தப் பயணத்தை முடிவு செய்து இந்தியாவிற்குத் திரும்பியவேளையிலே, வெளிநாடுகளில் வாழும் தமிழறிஞர்கள் மத்தியில் தமிழாய்வு பற்றிய ஈடுபாட்டைத் தோற்றுவிக்கவும், பல்வேறு நாடு களில் வாழும் பல்வேறு அறிஞர்களிடையே தொடர்புகளை ஏற்படுத்தவும் ஆங்கிலத்தில் ஒரு இதழ் தேவையென்பதை உணர்ந்து கொண்டார். இதற்காக ‘தமிழ் கல்ச்சர்’ (‘Tamil Culture’) என்ற இதழை 1952 பெப்ரவரியிலிருந்து வெளியிடத் தொடங்கினார். பல்வேறு நாடுகளில் வாழும் தமிழாய்வில் ஈடுபடும் பல்வேறு அறிஞர்களை ஒன்றிணைக்க இந்நூல் சிறந்ததாக விளங்கியது.

1952ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியேற்று 1961ஆம் ஆண்டு வரை இந்தப் பணியை அவர் தொடர்ந்து ஆற்றினார். கல்விக் கொள்கைகள், தமிழ் மொழியை கற்பிக்கும் முறைகள், சமூகக் கல்வியியல் போன்ற தலைப்புகளில் விரிவுரையாற்றியிருந்தார். பல்கலைக்கழகத்தில் இன, மத வேறுபாடுகள் இன்றி அடிகளார்




அனைவருடனும் நன்றாகப் பழகினார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பித்த போது, அங்கு தமிழ் ஆர்வத்தை வளர்ப்பதிலும், ஆராய்ச்சி உணர்வை ஊக்குவிப்பதிலும் முன்னின்று செயற்பட்டார். இதற்கிடையில் 1955 – 1957 காலப்பகுதியில் இலண்டன் பல்கலைக்கழ கத்தில் ‘பழந்தமிழ்ச் சிந்தனைகள்’ என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார். இதனையடுத்து இலங்கை திரும்பிய அடிகளார், முதுநிலை விரிவுரையாளராக பதவியுய ர்வு பெற்றார்.

இலங்கையில் தொடர்ந்து பணியாற்ற முடியாத சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டது. ஈழத் தமிழர் சமவுரிமை கோரி நடத்திய போராட்டத்தை ஆதரித்தார். 1961ஆம் ஆண்டு காலிமுகத்திடலிலே நடத்திய சத்தியாக்கிரகத்திலே அடிகளார் பங்கு பற்றினார். இதற்காக அடிகளார் அரசியலில் ஈடுபடுகின்றார் என்று அப்போதைய இலங்கைஅரசு தவறாக எண்ணியது, இதனால் அவர் தனது பல்கலைக்கழகப் பணியை துறந்துவிட தீர்மானித்தார். அதன் பின்னர் 1961ஆம் ஆண்டிலிருந்து 1969ஆம் ஆண்டு வரை மலாயா பல்கலைக்கழகத்தில் இந்தியத்துறை தலைவராக பணியாற்றினார். அடிகளாரின் முயற்சியால் பல்கலைக் கழகத்தில் பல்வேறு தமிழ் மொழி ஆய்வுகள் மேற்கொள்ள வழிவகுத்தார். அடிகளாரின் முயற்சியால் மலாயா பல்கலைக் கழகத்தின் இந்தியத்துறை உலகப் புகழ் பெற்றது. இவ்வாறானதனது செயற்பாட்டினால், தனிநாயகம் அடிகளார் மலாயா பல்கலைக்கழகத்தில் சிறந்த பேராசிரியர்களுள் ஒருவராக திகழ்ந்தார்.

1964ஆம் ஆண்டு கீழ்த்திசை அறிஞர்களின் மாநாடு டில்லியில் நடைபெற்ற போது, உலகத் தமிழராய்ச்சி மன்றம் நிறுவப்பட்டது. அதற்காக முன்னின்று உழைத்தவர் தனிநாயகம் அடிகளாரே ஆவார். இந்த மன்றத்தின் செயலாளராக அவரே தெரிவு செய்யப்பட்டார். இதனையடுத்து முதலாவது உலகத்தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்



# புராதன சின்னங்களை பேணி பாதுகாக்க வேண்டியது எம் அனைவரினதும் கடமை

மட்டுநகர் திவா

மட்டக்களப்பில் எத்தனை வெளிச்சவீடுகள் உள்ளன என கேட்டால் அனைவரும் பால மீன்மடுவில் உள்ள பிரதான வெளிச்ச வீட்டை மட்டுமே உள்ளதாக நினைத்து, ஒன்று என பதில் சொல்வார்கள். அதிகமாகத் தேவை இல்லை அவ்வூர் மக்களை கேட்டாலே ஒரே ஒரு வெளிச்ச வீடுதான் உள்ளதாகச் சொல்வார்கள். அண்மையில் ஜெகன் எனும் நண்பர். மட்டக்களப்பிலுள்ள வெளிச்சவீடு பற்றி ஆய்வு கட்டுரை ஒன்று எழுதித்தர கூறினார். வெளிச்ச வீட்டை பற்றி தகவல் அறிய களத்துக்கு சென்றபோது, பழமையான பிரித்தானியர் கட்டிய, தற்போது மக்களால் சுற்றுலாத்தலமாக பாவிக்கப்படும் பாலமீன்மடு வெளிச்சவீடு பற்றிய தகவல்களுக்கு மேலதிகமாக இன்னும் ஓர் பழமையான வெளிச்ச வீடு பற்றிய சில சில துப்புகள் கிடைத்தன. அவற்றை மூலமாகக்கொண்டு தேடிய போது அங்கே உள்ள மக்கள் மொட்டை கோரி என அழைக்கும் இடம் தான் அந்த பழமையான வெளிச்சவீடு என அறியக் கிடைத்தது. இது தற்பொழுது பாவிக்கப்படும் வெளிச்ச வீட்டுக்கு வடமேற்கு திசையாக அண்ணளவாக 1 கிலோ மீட்டர் தூரம் பயணிக்கும் போது இந்த மொட்டை கோரி எனும் இடத்தை அடைய முடியும். இந்த மொட்டை கோரி, கடலி லிருந்து அண்ணளவாக 200 மீட்டர் தூரத் துக்கு அப்பால் அமையப்பெற்றுள்ளது. இந்த வெளிச்சவீடு தற்போது அழிவடைந்த நிலையில் காணப்படுகிறது. தற்போது என நான் கூற வருவது கிட்டத்தட்ட நூறு வருடங்களுக்கு மேலாக இந்த மொட்டை கோரி அரைகுறையான கட்டடமாக தான் இருந்ததாக அவ்வூர் மக்கள் அவர்களின் மூதாதையர்கள் கூறியதாக குறிப்பிடுகின்றனர். புதிய வெளிச்சவீடு 1913ஆம் ஆண்டு கட்டிய வேளையிலும் அதற்கு முன்னைய காலங்களிலும் இந்த மொட்டைகோரி இருந்ததாக உள்ளூர்வாசியான கமலேஸ்வரன் (வயது 67) அவரது பாட்டனார் தனக்கு கூறியதாக சொன்னார். இந்த அழிவடைந்த நிலையில் உள்ள மொட்டை கோரியினை பார்க்கும் போது, கட்டடத்தின் உறுதித்தன்மையை பலப்படுத்துவதற்காக அதன் நடுவே நீளமான தண்ட வாளம் ஒன்றினை வைத்து கட்டியுள்ளனர். எனவே இது இலங்கைக்கு புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு (1858) பிரித்தானியர் கட்டிய கட்டடம் ஆக இருக்கலாம் என்பது எனது அனுமானம்.

இது சதுர வடிவமாக செங்கற்களால் கட்டப்பட்டிருப்பதுடன், அவை இவ்வளவு கால மும் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களையும்தாண்டி, சாந்து பூசாத நிலையிலும் உறுதியான நிலையில் இருப்பது அக்கால கட்டடக் கலையின் சிறப்பையும் மூலப்பொருட்களின் கலப்படம் இல்லாத தன்மையையும் வெளிப்படுத்துகிறது. இந்த வெளிச்சவீடு கட்டிய காலங்களில் கடலானது தற்போது நிலப்பகுதியாக உள்ள இடத்தை நோக்கி சற்று விரிவடைந்ததாக இருந்திருக்க வேண்டும். இதற்கான ஆதாரங்களாக அவ்விடத்தில் குழிகள் தோண்டும் போது கீழே முருகைக் கற்பாறைகள் அதிகமாக காணப்படுவதும், இயற்கையான உவர்நீர் குளங்கள் அல்லது மடுக்கள் காணப்பட்டதையும் குறிப்பிடலாம். அக்காலத்தில் மீனவர்கள் ஒன்பது மாதங்கள் தான் கடலுக்கு செல்வார்களாம். மற்றைய மூன்று மாதங்களும் கடலுக்கு மரியாதை கொடுத்து மீன்பிடிக்க செல்லாமல் இருப்பார்களாம் அந்த காலத்தில் தான் கடலில் காற்று பலமாக வீசும் எனவும் குறிப்பிடுகிறார்கள் அதனை அவர்களது பேச்சுத் தமிழில் 'மாடக் காற்று', 'பட்டினி காற்று' எனவும் கூறுகிறார்கள்.

இந்த பட்டினி காற்று வீசும் காலங்களில் கடலுக்கு வெளியே உள்ள மடுக்களில் இயற்கையாகவே சேகரிக்கப்பட்டிருந்த கடல்நீரில் கடலுக்கு மீன் பிடிக்கப் போகும் காலங்களில் வளர்த்த மீன்களை பிடித்துதும், காத்தான்குடியில் உள்ள முஸ்லீம் வியாபாரி ஒருவர் 25 சதத்துக்கு 2 கிலோ மரவள்ளிக்கிழங்கு என்ற விலையில் கொண்டு வந்து அவ்விடத்தில் விற்பாராம். அந்த மரவள்ளிக்கிழங்கையும், மடுவில் பிடித்த மீன்களையுமே அவ்வேளையில் உண்பதாகவும் அந்த நேரத்தில் நிகழும் நிகழ்வுகளை சுவாரசியங்கள் மிக்க கதைகளுடன் கூறி முடித்தார் அவ்வூ ரிலுள்ள முதிர்ந்த மீனவர் ஒருவர்.

கடலில் வரும் கப்பல்களுக்கு அதாவது அனேகமாக பாய்க்கப்பல்கள் தான் இங்கு வருமாம். அவ்வாறு வரும் கப்பல்களுக்கு லாம்பு மூலமாக இந்த வெளிச்சவீட்டில் இருந்து தான் சைகைகள் கொடுப்பார்களாம். இங்கு லாம்புஎனக் குறிப்பிடப்படுவது தற்போது மீனவர்கள் பயன் படுத்தும் கடல்லாம்பை ஒத்த பண்புகளை கொண்டதாக இருந்திருக்க வேண்டும். அதாவது நீண்ட நேரத்துக்கு கடல் காற்றுக்கும் தாக்குப் பிடித்து எரியக்கூடிய தீப்பந்தம் போன்ற அமைப்பாகும். இதை எரிக்க மண்ணெண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. கடல் மிக அருகில் இருந்ததாலும் தற்போது வளர்க்கப்பட்டுள்ள சவுக்கு மரங்கள் உள்ள அமைப்பு அந்தக் காலத்தில் காணப்படாமையாலும் இந்த வெளிச்சவீட்டின் உயரம் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகத்தான் காணப்பட்டுள்ளது. தற்காலத்தில் வீதி ஓரங்களில் காணப்படும் மின்சாரக் கம்பிகளை தாங்கி நிற்கும் தூண்களின் அளவு உயரம்தான் இருந்ததாக அறியக் கிடைக்கிறது. மச்சுவா, வத்தை என இருவகை மரங்களால் கடையப்பட்ட வள்ளங்கள் அக் காலத்தில் இருந்ததாகவும், அவைகள் மூலம் இந்தியாவில் இருந்து மட்டக்களப்பு கோட்டைக்கு பொருட்கள் கொண்டு வரும் பெரிய பாய் கப்பல்களில் இருந்து பொருட்களை இறக்கி மட்டக்களப்பு வாவி வழியாக கோட்டை வரை பாதுகாப்பாக கொண்டு சேர்ப்பார்களாம்.



மீன் பிடிக்கும் மேலாக இவ்வாறான சரக்கு பொருட்களை காவி இறக்கும் வேலை மூலம் அவர்கள் சற்று அதிக வருமானத்தை பெறுவதாகவும் அவ்வாறு ஓடுகள், கற்கள் இந்தியாவில் இருந்து இங்கே கொண்டு வந்த கதைகளை மீனவர்களின் உரையாடல் மூலம் அறிய முடிந்தது. புதியவை வந்தவுடன் பழையதை மறப்பது இயல்பு தான் எனினும் புராதன சின்னங்களை பேணி பாதுகாக்க வேண்டியது எம் அனைவரினதும் கடமையும் பொறுப்பும் ஆகும்.



# தமிழ்நாட்டில் ஈழ ஆதரவுச் செயற்பாடுகள் இப்போதும் சுறுசுறுப்பாக இருக்கின்றன.

தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் **பெ. மணியரசன்**

**தமிழ்நாட்டில்தமிழ்த்தேசியச்சிந்தனைப் போக்கு தொடர்பாக இந்தியாவிலுள்ள தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் பெ. மணியரசன் அவர்கள் எமது 'இலக்கு' ஊடகத்திற்கு வழங்கிய பிரத்தியேகமான நேர்காணல் வடிவம்.**

**கேள்வி:**

**தமிழ்நாட்டில் தமிழ்த் தேசியச் சிந்தனைப் போக்கு கடந்த காலங்களிலும், இப்போதும் எவ்வாறு உள்ளது?**

**பதில்:**

ஐரோப்பாவைப் பொறுத்தவரை, தேசியச் சிந்தனை, தேசம் பற்றிய கருத்தியல் 16, 17ஆம் நூற்றாண்டுகளில் உருவானது என்பர். ஆனால் தமிழர்களின் தேசியச் சிந்தனை தேசம் பற்றிய வரையறைகள் மூவாயிரம்அண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டவையாகும்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ்த்தேச எல்லையைத் தொல்காப்பியம் கூறுகிறது. தொல்காப்பியரின் ஒரு சாலை மாணாக்கர் பனம்பாரனர், தொல்காப்பியத்திற்கு எழுதிய அணிந்துரையில்(பாயிரத்தில்) தமிழ்த்தேச எல்லைகளைக் கூறுகிறார்.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்கிறார். தமிழ் பேசும் மக்களின் தாயகம் பற்றிய வரையறை இது. சங்ககால நூலான பரிபாடல் 'தண்டமிழ் வேலித் தமிழ்நாடு' என்று கூறுகிறது.

"வையக வரைப்பில் தமிழகம் கேட்பப் பொய்யாச் செந்நா நெளிய" என்று புறநானூறு (168) பேசுகிறது. "இமிழ் கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய" என்று சிலப்பதிகாரம் செப்புகிறது ஆறாம் நூற்றாண்டில் அப்பர் (திருநாவுக்கரசர்) "ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்" என்று இரு இனங்கள் பற்றிக் குறிப்பிடுகிறார்.

1937இல் சென்னை மாகாண காங்கிரசுக் கட்சியின் முதலமைச்சராக இருந்த இராசாசி இந்தியைத் திணித்த போது, அதை எதிர்த்து தமிழர்கள் போர்க்கோலம் பூண்டனர். அப்போது 1938 செப்டெம்பர் 11 அன்று சென்னைக் கடற்கரையில் மறைமலை அடிகளார் தலைமையில் பெரியார் சிறப்புரை ஆற்ற, நாவலர் சோமசுந்தர பாரதி யார் போன்ற அறிஞர்கள் உரையாற்றிய மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

பின்னர் 1940களில் காங்கிரசுத் தலைவர்களில் ஒருவரான ம.பொ.சி. அக்கட்சியில் இருந்து கொண்டேசுயநிர்ணயத்தமிழ்க்குடியரசு வேண்டும் என்று கோரினார். 'தமிழரசுக் கழகம்' என்ற அமைப்பைக் காங்கிரசின் துணை அமைப்பாக உருவாக்கிச் செயற்பட்டார். பின்னர் ஆதித்தனார், தமிழ்நாடும் தமிழ் ஈழமும் இணைந்த, விடுதலைபெற்ற 'தமிழ்ப் பேரரசு' நிறுவ வேண்டும்என்று முழங்கி நாம் தமிழர் கட்சி தொடங்கினர். பெரியாரும் அண்ணாவும் தனித் திராவிட நாடு அமைய வேண்டும் என்று முழங்கினர்.

இவ்வாறானதனிநாட்டு முழக்கமெல்லாம், தேர்தல் அரசியலில் கலந்து கரைந்து போயின. பிரிவினைத் தடைச் சட்டத்தின் காரணமாகப் பின்வாங்கின. செயற்கையான இந்தியத் தேசியத்தோடு ஒட்டிக் கொண்டன.

பின்னர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் பிரிவினைத் தடைச் சட்டம் இருக்கின்ற போதே தமிழ்நாடு விடுதலை மாநாடுகள், பேரணிகள் நடத்திச் சிறை சென்றார். மார்க்சிய லெனினிய போராளியும், சிந்தனையாளருமான தமிழரசன் 'தமிழ்நாடு விடுதலைப்படை' அமைத்து ஆயுதப் போர் நடத்துவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டார். அவரும் அவர் தோழர்கள் சிலரும் ஆட்சியாளர்களால் அடித்துக் கொல்லப்பட்டனர்; சுட்டுக் கொல்லப்பட்டனர். சிலர் சிறையில் அடைக்கப்பட்டனர். அரசின் ஒடுக்குமுறைகள் அந்த இயக்கத்தை முடக்கின.

தமிழ்த் தேசியத்தின் முந்தைய வரலாறு இது. இப்பொழுது எழுச்சி பெற்று வரும் தமிழ்த் தேசியத்திற்கு உந்துவிசை அளித்தது தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆகும்.

1990 பெப்ரவரி 25ஆம் நாள் எங்களின் இயக்கம் மற்றும் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், பாவலர் இன்குலாப், கவிஞர் அறிவுமதி போன்றோர் இணைந்து சென்னை பெரியார் திடலில் 'தமிழ்த் தேசியத் தன்னுரிமை மாநாடு' நடத்தினோம். முழுநாள் மாநாடாக நடத்தினோம். அம்மாநாட்டில் ஐயா ஈழவேந்தன் கலந்து கொண்டு உரையாற்றினார். மறவன்புலவு சச்சிதானந்தம் உள்ளிட்ட தமிழீழ அறிவாளர்கள் பலர் கலந்து கொண்டனர். பாவலரேறு பெருஞ்சித்திரனார், முனைவர் சாலை இளந்திரையனார் போன்றோர் சிறப்புரை ஆற்றினர்.

அம்மாநாட்டில் பிற்பகல் அரங்கத்திற்கு நான் தலைமை தாங்கி, "பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமை (Right to Self Determination with the Right to Secede)" தமிழ்நாட்டிற்கு வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்தேன். அது ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



அப்போது தமிழ்நாட்டில் தி.மு.க ஆட்சி. இத் தீர்மானத்திற்காகப் பின்னர் என்னைப் பிரிவினைத் தடைச் சட்டத்தின் கீழ் தளைப்படுத்தி சென்னை நடுவண் சிறையில் அடைத்தார்கள். கொஞ்ச நாட்களிலேயே பிணையில் வெளியே வந்தேன். எட்டு ஆண்டுகள் வழக்கு நடந்தது. நான் தீர்மானம் முன்மொழிந்ததை மறுக்கவில்லை. நான் இது அரசமைப்புச் சட்டம் வழங்கும் கருத்துரிமை என்றேன். எனக்காக வழக்கறிஞர்கள் வாதாடினார்கள். சாட்சியங்கள் சரி இல்லை. வழக்கில் விடுதலை ஆனேன்.

எந்த அடக்குமுறை வந்தாலும், தமிழ்த் தேசியத் தன்னுரிமை முழக்கத்தைக் கைவிடாமலும், தேர்தல் அரசியலில் பங்கெடுக்காமலும் இலட்சியத் தமிழ்த் தேசியம் வெல்லத் தொடர்ந்து இயங்குவது என்று முடிவெடுத்து செயற்பட்டு வருகின்றோம்.

தமிழீழத்தில் 2008, 2009இல் இந்தியா போன்ற நாடுகளின் உதவியுடன் சிங்களப் பேரின வெறி ஆட்சியாளர்கள் இலட்சக் கணக்கில் ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்த கொடுமையைப் பார்த்து, ஆவேசப்பட்ட தமிழ் இன இளையோரும், பெரியோரும் தமிழ்த் தேசியத்தின் பக்கம் அதிகம் நெருங்கி வந்தார்கள்.

இப்பொழுது தமிழ்த் தேசிய இயக்கங்கள் பல இருக்கின்றன. தேர்தலில் பங்கெடுக்கும் பெரிய இயக்கமாக நாம் தமிழர் கட்சி இருக்கின்றது.

தேர்தல் பங்கெடுப்பு தமிழ்த் தேசிய இலட்சியத்தைப் பலிகொண்டுவிடும். இந்தியஅரசு வரையும் எல்லைக்குள் தமிழ்த் தேசியத்தை முடக்கி விடும் என்பதற்காக நாங்கள் தேர்தலில் பங்கெடுப்பதில்லை. இறையாண்மையுள்ள தமிழ்த் தேசம் அமைப்பதை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.

**கேள்வி:**

**ஈழத்தில் தமிழ்த் தேசிய இருப்பிற்கு, தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளும், ஊடகங்களும், கல்வியாளர்களும், தகவல் தொழில்நுட்ப நிறுவ னங்களும் மக்களும் எவ்வகைப் பங்களிப்பை வழங்க முடியும்?**

**பதில்:**

தமிழீழ விடுதலைப் போரும், புலிகளும், தமிழீழ மக்களும் பல்வேறு நாடுகளின் பங்களிப்போடு, குறிப்பாக இந்திய அரசின் பங்களிப்போடு குருதி வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்ட பெருந்துயரம் தமிழ்நாட்டுத் தமிழர்கள் நெஞ்சில் என்றும் ஆறாத காயமாக அப்படியே உள்ளது. அப்போது காங்கிரசுக் கட்சியில் உள்ள தமிழர்கள் கூடத் துடித்ததை நான் அறிவேன். இன உணர்ச்சி என்பது மனித உளவியலில் இயல்பூக்கமாய் (instinct), பசி, தாகம் போல் உள்ளது.

இப்பொழுதும் இனப்படுகொலைகளிலும் மனிதகுல அழிப்பிலும் பங்கெடுத்த இலங்கை ஆட்சியாளர்களையும், படைத்துறையினரையும் பன் னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். 2015இல் ஐ.நா. மனித உரிமை மன்றம் நிறைவேற்றியதீர்மானத்தின்படி பன்னாட்டு வல்லுநர்களையும் இணைத்துக் கொண்ட புலன்விசாரணைக் குழுவை இலங்கை அரசு அமைக்க மறுப்பதால், அதை ஐ.நா. மன்றம் அமைக்க வேண்டும். வடக்கு கிழக்கிலிருந்து படையாட்களை முற்றிலுமாக விலக்கிக் கொள்ள வேண்டும். வடக்கு,



கிழக்கு மாகாணங்களில் சனநாயக உரிமைகளையும் குடிமை இயல் உரிமைகளையும் மக்களுக்கு வழங்க வேண்டும். இலங்கை அரசு, காணாமல் போனவர்கள் பற்றி பொறுப்புக்கூறல் வேண்டும். சிறையில் உள்ள தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற முழக்கங்களை அவ்வப்போது

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# பூர்வீகக் குடிகளை இனவழிப்பு செய்ததை ஏற்றுக்கொள்கிறது கனேடிய அரசு

தமிழில் **ஜெயந்திரன்**

**பகுதி 01**

ஒழுங்குமுறையான, கட்டமைப்பு ரீதியிலான வன்முறை தொடர்பாக, ஆயிரக்கணக்கான கதைகளை மூன்று ஆண்டுகளாகக் கேட்டபின்னர், கனடாவில் காணாமல் போன மற்றும் கொல்லப்பட்ட பூர்வீக குடிகளைச் சேர்ந்த பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் தொடர்பாக, கனடா ஒரு அரசு என்ற வகையில் பூர்வீகக் குடிகளின் இனவழிப்புக்கு பொறுப்பை ஏற்க வேண்டும் என்று காணாமல் போன மற்றும் கொல்லப்பட்ட பூர்வீகக் குடிகளைச் சேர்ந்த பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கான நாடளாவிய விசாரணை மிகவும் உறுதியான தீர்ப்பை வழங்கியிருக்கிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து கனேடியச் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் காலனீய விடுவிப்பு செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று விசாரணைக்குப் பங்களித்த மூன்று சட்டத்தரணிகளும் குறிப்பிடுகிறார்கள்.

பூர்வீகக் குடிகளைச் சேர்ந்த பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை இன வழிப்பு செய்யும் செயற்பாடே அவர்கள் மேல் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைக்கான மூலகாரணம் என்று மேற்படி காணாமல் போன மற்றும் கொல்லப்பட்ட பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கான தேசிய விசாரணை அமைப்பு கண்டறிந்துள்ளது. இனவழிப்பே நாடளாவிய இந்த விசாரணை அமைப்பின் குவிமையமாக திகழ்வதுடன், காலனீய வன்முறை என்பது வெறுமனே கடந்த காலத்தில் நடந்து முடித்துவிட்ட ஒரு செயற்பாடுஅல்ல, அது இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு விடயம் என்று இந்த விசாரணை வாதிடுகின்றது. கொள்கை மற்றும் செயன்முறைகளில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களினுடாக இனவழிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டிய சட்டபூர்வ கடப்பாட்டை நீதிக்கான அதன் 231 அழைப்புகள் பிரதிபலிக்கின்றன.

பூர்வீகக்குடிகள்அல்லாதவருடன்ஒப்பிடும் போது, பூர்வீகக் குடிகளைச் சேர்ந்த பெண்கள் ஆறு தடவைகள் அதிகமாக கொல்லப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன.



பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருப்பதால், எண்ணிக்கையைக் கணக் கெடுப்பது மிகக் கடினமானதாகும். இருப்பினும் இரண்டு தசாப்தங்களாகக் கனடாவில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளும் அறிக்கைகளும் கொல்லப்பட்டதாகவோ அல்லது காணாமல் போனதாக அறியப்படுகின்ற 1200 பூர்வீகக்குடிப் பெண்களின் பெயர்களை வெளிக்கொணர்ந்திருக்கின்றன. பூர்வீகக் குடிகள் அல்லாதவருடன் ஒப்பிடும் போது, பூர்வீகக் குடிகளைச் சேர்ந்த பெண்கள், ஆறு தடவைகள் அதிகமாக கொல்லப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன.

இவ்விடயம் தொடர்பாக பல ஆண்டுகள் எந்தவிதமான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படாத நிலையில், நான்கு வருடங்களுக்கு முன், 2016 செப்டெம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆய் வின் அடிப்படையில் ஏனைய மாகாண மற்றும் பிரதேசவாரியிலான 13 அரசாங்கங்களுடன் இணைந்து, காணாமல் போன மற்றும் கொல்லப்பட்ட பூர்வீகக்குடிகளைச் சார்ந்த பெண்கள், பெண்பிள்ளைகள் தொடர்பான ஒரு நாடளாவிய விசாரணைக்கு கனேடிய அரசு உத்தரவிட்டது. பாலியல் வன்முறை உட்பட எல்லாவி தமான அமைப்பு ரீதியிலான வன்முறைகளையும் தொடர்ச்சியாக இக்குழுவின் மீது மேற் கொள்ளப்பட்டுவரும் வன்முறைகளுக்கு அடிப்படைக் காரணங்களாக விளங்குகின்ற சமூக, பொரு ண்மிய, கலாச்சார, நிறுவன ரீதியிலான அனைத்துக் காரணங்களையும் கண்டறிந்து அறிக் கையிடும்படி இந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டிரு ந்தது.



இந்த உத்தரவுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விவாதங்கள் எதிர்வு கூறப்படக் கூடியவையாகவே இருந்தன. விவாதங்கள் இரண்டு விதமாக முன்னெடுக்கப்படுகின்றன. பூர்வீகக் குடிகளுக்குச் சார்பாக வாதிடுகின்ற ஆர்வலர்களும், செய ற்பா ட்டாளர்களும் பல வருடங்களாக முன்வைக்கின்ற வாதத்தை கனேடியப் பொதுமக்கள் தற்போது எதிர்நோக்குகிறார்கள் எனத் திருப்திப்படுகின்றவர்கள் இதில் ஒரு சாரார். அதே வேளையில், தனது பூர்வீகக்குடிகளுடன் கனடா கொண்டிருக்கும் உறவை 'இனவழிப்பு' என்ற பதத்தின் மூலம் குறிப்பிடுவதன் காரணமாக இப்பதத்தின் முக்கியத்துவமும் செயற்றிறனும் நீர்த்துப்போகும் நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றது என்று இன்னொரு சாராரும் வாதிடுகின்றனர். மிகப்பெரும் குற்றமான இனவழிப்பு குற்றத்தை கனடாவுடன் தொடர்பு படுத்துவதை பலரால் ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது என்றும் ஹைடி மத்தியூஸ் (Heidi Matthews) என்பவர் குறிப்பிடுகின்றார்.

சட்டம்தொடர்பானஆர்வலர்கள்நடுவிலும்



காணப்படும் இந்த பிளவை உற்றுநோக்கும்போது, காலனீயக் கடந்த காலம் தொடர்பாகவும், அது விட்டுச் சென்ற விடயங்கள் தொடர்பாகவும் மக்களின் அறிவும், அனுபவமும் எவ்வளவு தூரம் வெவ்வேறாகப் பிளவுபட்டிருக்கிறது என்பதையே இனங்காணக்கூடியதாக இருக்கிறது. கனேடிய மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அவர்களது வரலாறு, துல்லியமானதொன்றல்ல என்பதை இதிலிருந்து அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. ஒரு பொருட்டாகக் கருதப்படாத இனப் படுகொலை தொடர்பாக பன்னாட்டுச் சட்டத்தில் காணப்படும் வரையறைக்குட்பட்ட புரிதலும் இந்தப் பிளவிற்கான காரணமாகும்.

### காலனீய இனவழிப்பு என்றால் என்ன?

'இனவழிப்பு' என்ற பதத்தை பயன்படுத்துவதில் உள்ள சட்டபூர்வமான அடிப்படை தொடர்பாக, நாடளாவிய விசாரணை ஒரு மேலதிக அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பூர்வீகக் குடிகளுக்கான தொடர்பாளர் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த வரை விலக்கணத்தை வரவேற்றிருந்த அதே நேரத்தில் இது தொடர்பான நடவடிக்கைகளும் மேலதிக ஆய்வும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரும் 'அமெரிக்க மாநிலங்களின் அமைப்பும்' கேட்டிருந்தன.

இனவழிப்பின் உண்மையான இயல்பைக் கண்டறிவதற்கு இப்பதம் தொடர்பான பொதுவான எண்ணத்திலிருந்து நாம் விடுபட வேண்டும். காலனீய இனவழிப்பு என்பது மிகவும் மெதுவாக, படிப்படியாக நடைபெறுகின்ற ஒரு செயன்முறை ஆகும். இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லரினால் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு, றுவாண்டாவில் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்புபோன்ற குறிப்பிட்ட காலவரையறைக்குள் வகைதொகையின்றி மக்கள் கொல்லப்பட்டும் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு முன்னுதாரணங்களையும் பார்க்கும் போது, பூர்வீகக் குடிகளை அழித்தொழிக்கும் காலனீய குறிக்கோள், வெளியே தெரியாத முறையில் மிகவும் மறைவாக பல நூற்றாண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட விடயமாகும். இது கட்டமைப்பு ரீதியிலானதும் ஒழுங்கமைப்பு ரீதியிலானதும் பல வேறுபாடான உத்திகளைக் கொண்டதும், பல நிர்வாகங்களையும் அரசியல் தலைமைகளையும் உள்ளடக்கியது மாகும்.

இனவழிப்புக் குற்றத்துக்கான தனிப்பட்ட பொறுப்புக்கூறலை பன்னாட்டுக் குற்றவியல் சட்டத்தின் விருத்தி தன்னகத்தே கொண்டிருக்கும் அதே வேளையில், இனவழிப்பு தொடர்பாக ஒரு அரசுக்கு இருக்கின்ற பொறுப்பையும் அது சுட்டிக் காட்டுகிறது. தனிநபர்களுக்கு இருக்கும் குற்றப் பொறுப்பு பற்றி மேற்குறிப்பிட்ட நாடு தழுவிய விசாரணை ஆய்வை மேற்கொள்ளவில்லை. கனடா ஒரு அரசு என்ற வகையில் இனவழிப்பு தொட ர்பாக அதற்கிருக்கும் பொறுப்பையே காலனீய இனவழிப்பு கருத்திலெடுக்கிறது. தொடர்ந்து வந்த அரசியல் நிர்வாக அமைப்புகளால் ஏற்படுத்தப்பட்டு, பல தசாப்தங்களாக பேணப்பட்ட கனேடிய காலனீய கட்டமைப்பு களும் கொள்கைகளும் இனவழிப்பு தொடர்பான எண்ணற்ற செயல்களையும் செய்யாமல் தவறவிட்ட விடயங்களையும் கொண்டிருக்கின்றன. இவை அனைத்தும் கூட்டாக இனவழிப்பை தவிர்க்கின்ற பன்னாட்டுச் சட்டத்தை மீறுகின்றன.

தொடரும்......

## விக்னேஸ்வரனுக்கு ... தொடர்ச்சி...

பௌத்த அரசு எனக் கூறுகின்றார்கள்.

ஆனால், உண்மையில் அவ்வாறு கூற முடியாது. இவர்களுக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் மூன்று லட்சம் வாக்குகள் கிடைத்துள்ளன. அதனை அவர்கள் மறந்துவிட முடியாது. 13 ஆவது திருத்தத்தைப் பொறுத்தவரையில், அது விடுதலைப் புலிகளின் போராட்டத்தினால் கிடைத்த ஒன்று என்பதை மறந்துவிடக்கூடாது. விடுதலைப் புலிகளையும், போராட்டத்தையும் இவர் கள் இப்போது எந்தளவுக்குத்தான் கொச்சைப்படுத்தினாலும் அவர்களுடைய போராட்டத்தினால்தான் இந்தியா இதனைக் கொண்டுவந்தது.

இது இந்தியாவுடனும் சம்பந்தப்பட்ட ஒன்று. அதனை முற்றுமுழுதாக அரசாங்கத்தினால் இல்லாமல் செய்துவிட முடியாது. 19ஐ நீக்கி 20ஐ கொண்டுவருவதைப் போல 13ஐ இல்லாமல் செய்துவிட முடியாது. ஆனால், 13 சட்டமூலமாகிய பின்னர் ஒருபோதுமே அது முழுமையாக நடைமுறைப்படுத் தப்படவில்லை. அவ்வாறு அது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், எமது பிரச்சினைகள் பல தீர்க்கப்பட்டிருக்கும். ஓரளவுக்கு யுத்தத்துக்குப் பின்னர் இந்த 11 வருட காலத்தில் 13ஆவது திரு த்தம் குறித்து யாரும் பேசவில்லை.

கடந்த நான்கரை வருடகாலத்தில் அரசியலமைப்புப் பேரவை என்றே காலம் சென்றதே தவிர இது குறித்து யாரும் பேசவில்லை. அந்தப் புத்தகம் இப்போது மூடப்பட்டுவிட்டது. இப்போது 13 குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது. அரசாங்கத்திலுள்ள சிலர் தமது அரசியல் தேவைகளுக்காக 13 குறித்து இப்போது பேசிக் கொண்டிருக்கின்றார்களே தவிர, அதனை இல்லா தொழிப்பதற்கான சாத்தியம் மிகவும் குறைவாக இருக்கின்றது என்பதே எனது அபிப்பிராயம்.

**கேள்வி:**

**பொது ஜன பெரமுனை அரசாங்கம் இப்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இருக்கின்றது. இந்த நிலையில், அவர்கள் தமிழ்த் தரப்பினருடன் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு வருவதற்கான சாத்தியம் உள்ளதா?**

**பதில்:**

இவர்களுக்கு என்னதான் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தாலும், தேசிய இனப் பிரச்சினைக்கு அவர்கள் தீர்வைக்காணத்தான் வேண்டும். காலம் கடந்து போனாலும் பொருளாதாரப் பிரச்சினைகள், உலக நாடுகளின் அழுத்தங்கள் என்பன இவர்களுக்கு அதற்கான நிர்ப்பந்தத்தைக் கொடுக்கும். இங்கு தேசிய இனப் பிரச்சினை ஒன்று உள்ளதென்பது இன்று உலக நாடுகளுக்குத் தெரியும்.

அதனை எவ்வாறு தீர்ப்பது என்பதுதான் கேள்விக்குறியாக உள்ளதே தவிர, பிரச்சினை உள் ளது என்பது அனைவருக்கும் தெரியும். ஜெனீவா போன்ற சர்வதேச அரங்குகளில் இந்தப் பிரச்சினை பேசப்பட்டுக்கொண்டுதான் இருக்கப் போன்றது. அதனால், சர்வதேச அழுத்தங்களைச் சமாளிக்க சில முயற்சிகள் எடுக்கப்படலாம். ஆனால், அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமா என்பதுதான் கேள்வி. அதே வேளையில் காலங்கடத்துவதன் மூலமாக இந்தப் பிரச்சினையை நீர்த்துப்போகச் செய்வதற்கு அரசு முற்படலாம். பிரச்சினைக்குக் குறிப்பிட்ட கால கட்டத்துக்குள் தீர்க்கப்படவிட்டால், தீர்வு வரும் போது பாதிக்கப்பட்டவர்கள் இருக்கமாட் டார்கள்.

குறிப்பாக, காணாமல் போனோர் விடயத்தை எடுத்துக்கொண்டால், இன்றும் ஒரு பத்து வருடத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடுபவர்களே காணாமல் போய்விடுவார்கள். அரசியல் தீர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதே வேளையில், போரால் ஏற்பட்ட பாதிப்புகள், அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கடந்த அரசியல் தீர்வும் வரவில்லை. ஏனைய விடயங்களுக்கும் உறுதியான தீர்வு எதுவும் கிடைக்கவில்லை. தமிழ்த் தரப் பைப் பொறுத்தவரையில் கிடைத்த நல்ல சந்தர்ப்பங்களைத் தவறவிடுவது மிகப்பெரிய குறைபாடாக இருக்கின்றது. 19 ஆவது திருத்தம் அதில் முக்கியமானது. மைத்திரி - ரணில் அரசு பதவிக்கு வந்தவுடன் அவசரமாக அதனைச் செய்தது. அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் நெருக்கமாக இருந்தது. அந்த அரசாங் கத்தைப் பாதுகாப்பதற்கு அனைத்தையும் கூட்ட மைப்பு செய்தது. அப்போது எதிர்க்கட்சித் தலை மைப் பதவியும் கிடைத்து, அரசாங்கத்தைப் பாதுபாப்பதற்கான சந்தர்ப்பமும் அரசுக்குக் கிடை த்தது. இவ்வாறான சந்தர்ப்பம் மற்றொரு முறை வரப்போவதில்லை.

## வரலாறு தெரியாத ... தொடர்ச்சி...

அவதூறுகளையும் சேறடிப்புக்களையும் செய்துள்ளனர்.

இப்போது பாராளுமன்றத்தில் எனக்கு எதிர்ப்பு வருகின்ற போது எம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் மௌனிகளாக இருக்கின்றார் கள். நான் பேசுவது அவர்களுக்காகவும் தான் என்பதை மறந்து நிற்கின்றார்கள்.

உலகின் மூத்த மொழி தமிழ், உலகின் மதிப்பு மிக்க செம்மொழி அது என்பதை இந்தியாவில் மாத்திரமின்றி உலக நாடுகள் பலவற்றிலும் கூறி வருகின்றார்கள். ஆனால் தென்னிலங்கையில் இருப்பவர்களுக்கு அது தெரியவில்லையா? தெரியாததைப் போல நடிக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன்.

அவர்கள் தங்கள் வரலாற்றைப் புனைகின்றார்கள். புனைந்து பேசுகின்றார்கள். நாமோ எங்களுக்கு என இருக்கின்ற உண்மையான வரலாற்றை இதுகாறும் பேசாது இருந்து விட்டோம்.

மரணம் என்பது எல்லோருக்கும் பொது. படைத்துறை உயர் தளபதிகளுக்குங்கூட மரணம் வரும். நான் ஓய்வெடுத்து என் பேரப்பிள்ளைகளுடன் பொழுதைக் களிக்கலாம். ஆனால் வடக்கின் முதலமைச்சர் பதவிக்காக இழுத்து வரப்பட்ட எனக்கு, சில கடமைகள் இருப்பதை உணர்ந்தேன். பல உண்மைகளை அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதையும் இப்போது உணர்ந்துகொண்டுள்ளேன். அதைத் தடுக்க சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது உயர் இராணுவ அதிகாரிகள் எனக்கு மரணபயம் ஊட்டுவதால் ஆவதொன்றுமில்லை என தெரிவித்துள்ளார்.

## தனிநாயகம் ... தொடர்ச்சி...

நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. 1964 ஏப்ரல்17–23ஆம்திகதிவரைதனிநாயகம்அடிகளார் தலைமையில் முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு மலாயா பல் கலைக்கழக வளாகத்தில் சிறப்பாக நடந்தேறியது. 21 நாடுகளிலிருந்து அறிஞர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். இங்கு முன்வைக்கப்பட்டிருந்த கட்டுரைகள் ஆங்கில மொழியில் இடம்பெற்றிருந்தாலும், தமிழ்மொழியிலும் ஆய்வுக்கட்டுரைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. உலகத் தமிழராய்ச்சி மாநாடு என்பது முற்றுமுழுதாக தனிநாயகம் அடிகளாரின் சிந்தனையில் உதித்த எண்ணக்கரு என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

தனிநாயகம் அடிகளாரின் குருத்துவ வாழ்வு தன்னை முழுவதுமாக இறைவனுக்கு அர்ப்பணித்து வாழும் முக்தியை அவருக்கு கொடுத்தது. தமிழ் மொழிக்கு பணியாற்றுவதை இறைபணியாகவே அவர் கருதினார். நாற்பத்து மூன்று நாடுகளிலிருந்து வந்த 250 மாணவர்களுடன் ஐந்து ஆண்டுகள் இணைந்து வாழ்ந்த அனுபவம் ஒரு விரிந்த, பரந்த பார்வையை அடிகளாருக்குத தந்தது. அடிகளார் கற்றுத் தேர்ந்த பன்மொழிப்புலமை உலகின் பல பாகங்களில் உள்ள மக்களுடனும், அவர்களுடைய இலக்கியம் பண்பாடுகளுடன் இலகுவாக தொடர்பை ஏற்படுத்த அவரு க்கு உதவியது. தனது வாழ்நாளில் 51 நாடுகளை அவர் தரிசித்திருக்கின்றார். அவர் செல்லும் நாட்டில் அந்த நாட்டு மொழியிலேயே உரையாற்றும் திறன் பலரையும் ஈர்க்கும் ஒரு விடயமாக இருந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே அவரது வாழ்வும் ஆய்வும் பல்வேறு தமிழறிஞர்களுடைய தொடர்பையும் நட்பையும் அவருக்குப் பெற்றுத் தந்தது. அவர் வெளியிட்ட ‘தமிழ்க் கல்ச்சர்’ முத்திங்கள் இதழ் உலகத் தமிழரிடையே ஒரு உறவுப் பாலமாக அமைந்தது. தூத்துக்குடி ஆயர் மேதகு திபூசியஸ் றோச் ஆண்டகை தனிநாயகம் அடிகள் சுதந்திரமாக தனது தமிழ்மொழித் தேடல்களை மேற் கொள்ளவும், அதற்காக உலகம் பூராவும் பய ணம் செய்யவும் வேண்டிய அனுமதியை அவருக்கு அளித்திருந்தார். இவை அத்தனையும் தான் தமிழ்த் தூது தவத்திரு தனிநாயகம் அடிகளாரை, எங்கள் தாய்மொழியாம் தமிழ்மொழியை உலகத் தமிழாராய்ச்சி மாநாடு என்ற உயர்ந்த தளத்துக்கு எடுத்துச் செல்ல அவரை இட்டுச் சென்றன.

## தமிழ்நாட்டில் ஈழ ஆதர ... தொடர்ச்சி...

நடத்தும் ஆர்ப்பாட்டங்களிலும், கருத்தரங்குகளிலும் தமிழ்நாட்டுத் தமிழர்கள் வலியுறுத்தி வருகிறோம்.

தமிழீழம் குறித்து ஐ.நா. மேற்பார்வையில் கருத்து வாக்கெடுப்புக்கும் கோரி வருகிறோம். இன்றைக்கும் தமிழ்நாட்டில், ஈழத் தமிழர்களையோ, விடுதலைப் புலிகளையோ வெளிப்படையாக எதிர்க்கும் நிலை பிரபல அரசியல் கட்சிகளிடம் இல்லை. காரணம் தமிழ்நாட்டுத் தமிழர்களின் மனநிலையை அக்கட்சிகள் உணர்ந்திருப்பதுதான். தமிழ்நாட்டு பா.ச.க.கூட வெளிப்படையாக, விடுதலைப் புலிகளை எதிர்த்துப் பேசுவதில்லை. ஆனால் அக்கட்சி விடுதலைப்புலிகளுக்கு எதிரானது தான். காங்கரசும் அப்படியே.

தமிழ்நாட்டு மக்களிடம் தமிழீழ ஆதரவு கொந்தளிக்கும் நிலை ஏற்பட்டால், இங்குள்ள அரசியல் கட்சிகள் வீதிக்கு வந்து ஆதரவுப் போராட்டங்களை நடத்தும். அவை தாங்களாக முன்வந்து அப்போராட்டங்களை நடத்துவதில்லை.

தமிழ்நாட்டில் இன உணர்வு இயக்கங்கள் அவ்வப்போது ஈழத்திற்காக நடத்தும் போராட்டங்கள், அந்தந்த அமைப்புக்களின் உறுப்பினர்களைக் கொண்டதாகவே இருக்கிறது. வெகுமக்கள் பங்கெடுப்பு குறிப்பான சூழ்நிலைகளில் தான் வரும்.

தமிழ்நாட்டில் இது சூடுபிடிக்க வேண்டுமானால், தமிழீழத்தில் வெகு மக்கள் இயக்கம் பெருந்திரளாக நடக்க வேண்டும். இலட்சியத்தில் உறுதி கொண்ட கட்டுக்கோப்பான தலைமை அதன் வழிகாட்டலில் ஆவேசம் மிக்க மக்கள் எழுச்சி தமிழீழத்தில் உருவாக வேண்டும். அதன் தாக்கம் தான் தமிழ் நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள தமிழர்களிடம் பேரெழுச்சியை உருவாக்கும்.

தமிழ் நாட்டு ஊடகங்கள் அப்போது தான் ஈழத்துதமிழர்உரிமை குறித்து அதிகமாகக்கவனம் செலுத்தும். ஆனால் சமூக வலைத்தளங்களில் - தமிழ்நாட்டில் – ஈழ ஆதரவுச் செயற்பாடுகள் இப்போதும் சுறுசுறுப்பாக இருக்கின்றன.



# அன்று தொட்டு இன்று வரை
# தமிழர் வாழ்வில் பனையின் வகிபாகம்

**கார்த்திகேசு கோபாலகிருஷ்ணன்** முகாமையாளர் விரிவாக்கம் பனை அபிவிருத்திச்சபை

பனைமரம் இலங்கையில், தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்கு பகுதிகளிலும் புத்தளம், அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளிலும் மேலும் தமிழர்கள் வாழ்கின்ற அல்லது நமது மூதாதையர் வாழ்ந்த நாடுகளான மலேசியா, இந்தோனேசியா, மியான்மார், வியட்நாம், கம்போடியா, ஆபிரிக்கா, கென்யா, கொங்கோ போன்ற நாடுகளிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தின் ஒரு அடையாளமாக உள்ள பனை பல தலைமுறைகளாக நமது கிராமப்புறங்களின் கலாசாரத்தோடும் பொருளாதாரத்தோடும் பின்னிப் பிணைந்துள்ளது.



பனைமரம் என்பது ஒரு மரம் என்ற அளவில் நின்றுவிடாது பண்டைய தமிழர்களின் கலை, இலக்கிய, விஞ்ஞான அறிவை தலைமுறை தலைமுறையாக தாங்கி வந்து நமக்குப் பரிசாக அளித்த அழகிய பேழை என்றே கூற வேண்டும். அச்சுத்துறை இல்லாத காலத்தில் உருவான உலகம் போற்றும் திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் உள்ளிட்ட அனைத்து தமிழ் இலக்கியங்களும் பத்திரமாக புதிய தலை முறைகளுக்குக் கிடைக்கக் காரணம் பனை ஓலைகள் தான் . பனையோலைகள் இல்லாவிடில் தமிழுக்கு இவ்வளவு எண்ணிக்கையிலான பழந்தமிழ் இல்ககியங்கள் கிடைத்திருக்க வாய்ப்பில்லை.

இன்று போல் தாலி அன்று தங்கத்தில் இருக்கவில்லை. அந்தக் காலத்தில் தாலமரத்து(பனை) ஓலையில் மணமகன், மணமகள் பெயரெழுதி சுருட்டி மணமகளுக்கு மணமகன் அணிவித்தால் தான் அதற்கு தாலி என்று பெயர் வந்ததாம். திருமணச் சடங்கையும் பனை ஓலையில் தான் எழுதினர். பிறந்த குழந்தைகளின் சாதக குறிப்புகளும் ஏடுகளிலேயே எழுதப்பட்டது. குழந்தைகளுக்கு ஏடு தொடக்கவும் பனை ஏடு தான் பயனாயிற்று. பழந்தமிழ் மன்னர்களின் குலச்சின்னமாகவும் பனை விளங்கியது.



அன்று பனையிலிருந்து பூம்பாளையைச் சீவி பெறப்படும் பதநீரைக் குளிர்பானமாக அருந்தினார்கள். இதிலிருக்கும் குளுக்கோஸ் மெலிந்த உடலுடைய குழந்தைகளின் உடலைச் சீராக்கி நல்ல பலத்தைத் தருகிறது. பதநீரைப் பேதி மருந்தாகவும் பாவித்தார்கள். கருவுற்ற பெண்களுக்கும், குழந்தை பெற்ற பெண்களுக்கும் ஏற்படுகின்ற மலச்சிக்கல், வயிற்றுப் புண் என்பவற்றை குணப்படுத்துவதால், அவர்களுக்கும் கொடுத்தார்கள்.

பதநீர் இரத்த அழுத்தத்தை சீராக்கி, இருதயத்தை வலுவடையச் செய்வதால் யாவருக்கும் மருந்தாயிற்று. மேலும் இதிலிருக்கும் கல்சியம் பற்களை உறுதிப்படுத்தி, ஈறுகளில் இரத்தக் கசிவை ஏற்படுவதை தடுப்பதோடு பற்களின் பழுப்பு நிறத்தையும் மாற்றுகிறது. இதிலிருக்கும் இரும்பச்சத்து பிதத்தத்தை நீக்கி சொறி, சிரங்கு உட்பட சகல தோல் வியாதிகளையும் நீக்குவதுடன் கண்நோய், காசநோயையும் நீக்குவதனால் வைத்தியசாலை சென்றவர்கள் மிகக் குறைவு. இன்று இளையோர் கொகோகோலா போன்ற உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் மேலை நாட்டுப் பானங்களையே விரும்பிக் குடித்து நோயைக் காசு கொடுத்து வாங்குகிறார்கள். பனங் கொட்டையை முளைக்கப் போட்டு அதிலிருந்து பனங்கிழங்கு பெறப்படுகின்றது. முளை வந்த பனங்கொட்டையைப் பிளந் தால் அதன் மத்தியிலுள்ள மென்மையான, இனிப் பான பூரானை சிறுவர், பெரியோர் விரும்பி உண்பர்.

பனங்கிழங்கை அவித்தும், நெருப்புத் தணலில் சுட்டும் மாலை நேரச் சிற்றுண்டியாக உண்பர். மேலும் அவித்த நன்கு தும்பு வார்ந்த கிழங்குத் துண்டுகளுடன் பச்சை மிளகாய், உள்ளி, மிளகு,



உப்பு, வெங்காயம் சேர்த்து இடித்து உருண்டையாக்கி துவையல் செய்தும் உண்பர். பனங்கிழங்கில் புரதச்சத்துடன் நிறைய கல்சியமும், பொஸ்பரசும், மாச்சத்தும் உள்ளதால், நல்ல சக்தியை அளிக்கும் இயற்கையான சத்துணவாகும். ஆனால் நாமோ மாலை நேரங்களில் நோய் தரும் துரித உணவகங்களை நோக்கி குடும்பமாகச் சென்று குழியில் விழவே ஆசைப்படுகிறோம்.

கிழங்கை இரண்டாகக் கிழித்துக் காயவைத்துப் பெறுவதை ஒடியல் என்பர். இதை இடித் தரித்து எடுக்கும் மாவுடன் முருங்கையிலை சேர்த்து பிட்டு அவித்து தனித்தும், சோற்றுடனும் கலந்து கறிகளோடு சேர்த்துச் சாப்பிடுவர். சிலர் சர்க்கரையுடன் கூட சாப்பிடுவர். அன்றைய தமிழரின் பாரம்பரிய உணவு இது. உட லுக்குப் பலமும்தந்தது. இன்று அரிசி மாவும், கோதுமைமாவும் அவ்விடத்தை ஆக்கிரமித்து விட்டன.

அடுத்து இம் மாவில் தயாரிக்கப்படும் முக்கிய உணவு கூழ். ஒடியல் மாவுடன் மிளகாய், உள்ளி, மிளகு, புளி, உப்புக் கரைசல், மரவள்ளிக்கிழங்கு, பலாக் கொட்டை, முருங்கைக் கீரை போன்ற மரக்கறி வகைகளைச் சேர்த்து காய்ச்சி, தேங்காய்ச் சொட்டும் சேர்த்து சாப்பிட அருமையாக இருக்கும். இது ஒரு நிறையுணவு. சளி, தடிமன் இருந்தால் பறந்து விடும்.



இது சைவக் கூழ். இத்துடன் மீன், நண்டு, கணவாய், இறால், திருக்கை, மட்டிச்சதை சேர்த்து சமைப்பது மச்சக் கூழ். இது மச்சப் பிரியர்களுக்கு நல்ல காரசாரமாய் இருக்கும். முல்லைத்தீவு சார்ந்த இடங்களில் இத்துடன் மான், மரை வத்தல் இறைச்சியும் சிறிது சேர்ப்பர். இன்றும் பலரால் குறிப்பாக ஆண்பிள்ளைகளால் விரும்பப்படுகிறது.

அவித்த கிழங்கை நன்கு தும்பு வார்ந்து இரண்டாகப் பிளந்து நீளமாக சீவி காயவிட்டு எடுப்பதைச் சீவலொடியல் என்பர் தேங்கா ய்ச் சொட்டுடன் கூட்டுச் சேர்ந்தால் பிரமாதமாக இருக்கும். பலவருடம் பாதுகாக்கக் கூடியது. இதை இடித்து மாவாக்கி தேங்காய்த் துருவல், சீனி, சர்க்கரை, பனங்கட்டி சேர்த்து உண்பர். நல்ல சத்தான சாப்பாடு. அன்றைய நாட் களில் பல் பலமாக இருக்க இதைக் கடித்துச் சாப் பிடுவார்கள்.

பனையின் இளங்குருத்தையும், குருத்தின் அடிப்புறமாகவுள்ள மென்மையான பகுதியான பனஞ்சோற்றையும் விரும்பி உண்பர். மிகவும் இனிப்பான இவற்றில் நிறைந்த நார்ச்சத்துள்ளது.



இவை மட்டுமல்லாது பனம்பூ, பூந்தண்டு, பனைவேர் என எல்லாமே நாட்டு மருந்துகளாக உள்ளன. நாம் அவற்றின் அருமை தெரியாமல் ஆங்கில மருந்துகளையே தேடிப்போ கிறோம்.

வீடு, முதலான கட்டிடங்களின் கூரை, வளை, தீராந்தி, பாவு மரம், சலாகை, மரச்சட்டம் என யாவும் பனைமரத்தைக் கொண்டே செய்யப்பட்டன. வெப்பவலயமான எங்கள் பிரதேசங்களில் ஒடுகளால் கூரை வேய்பட்ட காலத்திற்கு முன் காய்ந்த பனையோலை கொண்டு வீட்டிற்கு



கூரை வேயப்பட்டது. இக்கூரைகள் மிகுந்த சுவாத்தியமாக காணப்பட்டன.

கதியால் வேலிகளுக்கு மறைப்பாகவும், பாதுகாப்பாகவும் பனையோலையால் மறைத்தமைக்கும் வழக் கம் உண்டு. கதியாலுக்குப் பதிலாக பனை மட்டையையும்,வேலியடைக்க உபயோகிப்பர். இவை பார்ப்பதற்கு மிக நேர்த்தியாகவும், அழகாகவும் இருக்கும். ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இவை உக்காது நிலைத்திருக்கும். இன்று கிராமப்புறங்களில் சில இடங்களில் காணக் கூடியதாக உள்ளது.

பனையோலையின் குருத்தில் இழைக்கப்படும் கூம்பு வடிவுடைய நீத்துப்பெட்டி இன்றும்



கிராம, நகரப்புறங்களில் மட்டுமல்லாது, வெளி நாட்டிலுள்ள நம்மவர்களின் பாவனையிலும் உள்ளது. தமிழர் பாரம்பரியத்தில் பல்வேறுபட்ட உணவுகள் காணப்பட் டாலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் எல்லா வீடுகளிலும் காலை, இரவு வேளை உணவுகளில் பெரும்பாலும் பிட்டு அவிப்பார்கள். அதற்காக இந்த நீத்துப்பெட்டியைப் பாவிக்கிறார்கள். நவீன மயமான பல மாற்றங்கள் ஏற்பட்டாலும் நீத்துப்பெட்டியில் பிட்டு அவித்து சாப்பிடுவதில் உள்ள ருசியே தனிதான்.

தொடரும்.........